கண்களைத் தேய்த்துக் கொண்டு.. திரும்பத் திரும்பப் படித்தான். ஒவ்வொரு வரியையும் நாலைந்து முறை படித்தான். வரிவிட்டு வரியை தாவித்தாவிப் படித்தான். இருவரும் ஒரே எண்ணத்தோடு.. இப்படி ஒதுங்கி ஒதுங்கி இருந்திருக்கின்றோமே.. அவள் கடிதத்தை.. மடிக்க மனம் இல்லாமல்... நேராய் வைத்து.. மடிப்பை அப்படி ஒரு காதலோடு நீவிவிட்டான்... என் கடிதத்திற்காக மாயா காத்திருப்பாளே.. காத்திருந்து அவள் வாடக்கூடாது... உடனே.. பேப்பரை எடுத்து.. யோசிக்காமல் எழுதத் தொடங்கினான்.

என் உயிர் மனைவி மாயாவிற்கு...! உன் வரவிற்காக ஒவ்வொரு விநாடியும் காதல் பொங்க.. உயிர் உருக... காத்துக் கொண்டிருக்கும் விக்னேஷ் எழுதுவது.. என அவன் பாட்டிற்கு எழுதிக் கொண்டே போனான்... கவிதையும்.. இலக்கியமும் இணைந்து அவனுக்கு கைகொடுத்தது... நாலைந்து வரிகளுக்கு மேல் எழுதும் போது சிரித்தான். கண்கள் கலங்கி.. சொட்டு சொட்டாய் கடிதத்தில் விழுந்து.. அவன் காதலை அழகான கோலமாக்கியது.

# பந்தம் பாசம்

## 1

**செ**ல்வ விநாயகத்தின் வயது ஐம்பத்தி இரண்டு இருக்கும். இருபத்தி நாலிலேயே திருமணம். சாரதா என்றொரு அற்புதமான மனைவி. ஒரு காலத்தில் அந்த ஊர் பணக்காரர்களில் முதல் இடத்தில் இருந்தவர். மரியாதையுள்ள பெரிய மனிதர், தெருவில் நடக்கும்போது திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருக்கும் பெண்கள் எழுந்து நின்று மரியாதை கொடுக்கும் அளவு உயர்ந்த மனிதர். இருபத்தி ஏழு வயது பெரிய மகன் அரவிந்தன், அடுத்தவன் சிவா. இருபது வயது மீரா. பதினேழு வயது சுமதி என்ற இரு பெண்கள். அது மட்டும் அல்லாமல் சாரதாவின் தூரத்து



சொந்தக்காரியின் மகளான பாரதியும் இவர்கள் வீட்டில். பாரதி கெட்ட நேரத்தில் பிறந்ததால்; தகப்பனின் கொடுமை தாங்காமல் தாய் உயிரை மாய்த்துக் கொண்டதும், சட்ட பூர்வமாக பாரதியைத் தங்கள் மகளாக்கிக் கொண்டார்கள் செல்வவிநாயகம் சாரதா தம்பதியர். பாரதிக்கு இந்த விஷயம் தெரியாது.

பெரிய மகன் அரவிந்தன், முதுகலை பட்டப்படிப்பு முடித்து இருந்தான். சின்னவன் சிவா, பி.எஸ்ஸி முடித்து இருந்தான். பெரிய மகள் மீரா காலேஜ் போய்விட்டாள். சின்னவள் சுமதி பனிரெண்டு, பாரதி ஒன்பதும் படித்துக் கொண்டு இருந்தார்கள். ஐந்து பிள்ளைகள் காலேஜிலும், பள்ளியிலும் படிக்கும்போது இந்தக் காலத்தில் எந்தக் குடும்பம்தான் ஆட்டம் காணாது. செலவுகள் தொண்டையை இறுக்கிப் பிடித்தன. ஒவ்வொரு நிலமாக விற்கத் தொடங்கினார், கணிசமாக சொத்துக்கள் குறைய ஆரம்பித்தன. முதல் நாள் சின்னவனிடம் இருந்து தந்தி வரும். உடனே ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது என்று. அடுத்த நாளே சொல்லி வைத்தாற்போல் பெரியவனிடம் இருந்து தந்தி வரும், ஹாஸ்டல் பீஸ் கட்டணும், அந்த பீஸ் கட்டணும், இந்த பீஸ் கட்டணும்னு பட்டியல் நீளும்.

அடுத்த நிமிடமே சாரதாவின் கையிலோ, கழுத்திலோ, காதிலோ இருக்கும் நகைகளில் ஒன்று வட்டிக்கடை நோக்கிப் போகும். இதில் இயற்கை வேறு கை விரித்து விட்டால், வயிற்றில் ஈரத்துணியைப் போட்டுக்கொள்ள வேண்டியதுதான். ஆனாலும் பிள்ளைகளைப் படிக்க வைத்துவிட வேண்டும். தாங்கள் பட்ட கஷ்டம் எந்த ஜென்மத்திலும் அவர்கள் படக்கூடாது. அது மட்டும் மந்திரமாக அவர்களுக்குள் எதிரொலித்துக் கொண்டு இருந்தது. வெயிலில் இடிபட்டு அடிபட்டு கறுத்துப் போய் இருந்தாள் சாரதா. முன் நெற்றியில் முடிகள் எல்லாம் வெள்ளிக்கு ஏலம் விட்டிருந்தன.



எண்ணெய் வைத்து நாளானதால் முடிகள் ஆளுக்கு ஒரு திசையில் பறந்து கொண்டு இருந்தன. இரண்டு கைகளிலும் மின்னிக் கொண்டு இருந்த தங்க வளையல்கள் எல்லாம் பறந்து போய் வெகு ஆண்டுகள் ஆகின்றன. ரப்பர் வளையல்கூடப் போட நேரம் இல்லாமல் காட்டிற்கும் வீட்டிற்கும் நாயாக அலைந்து கொண்டிருந்தாள். கணுக்காலுக்கு மேலே ஏற்றிக் கட்டியிருந்த வாயில் புடவை, அதுவும் பருத்தி மிளாரின் கைவண்ணத்தில் அங்கொன்றும் இங்கொன்றும் பொத்தல்களாகிக் கிழிந்து தொங்கின.

அரவிந்தன் கோவையில் பெரிய வங்கி அதிகாரியாக வேலைக்குச் சேர்ந்து ஆறு மாதங்கள்தான் ஆகின்றன. அதற்குள் நான்... நீ என பெண் கொடுக்க ஜாதகத்தோடு முற்றுகையிட்டார்கள்.

சாரதாவிற்குள் லேசான பயம்தான். மூத்த மகன் வேலைக்குப் போய் ஆறு மாதங்கள் ஆகின்றன. அதற்குள் அவனுக்கு இத்தனை போட்டிகளா? வயதுக்கு வந்த இரண்டு மகள்கள் இருக்கும்போது மகனுக்குத் திருமணமா? அவர்களின் அந்தஸ்தைவிட உயர்ந்தவர்கள்கூட செல்வ விநாயகமும் சாரதாவும் கண்காட்ட மாட்டார்களா என்று ஏங்கிக் கொண்டு இருந்தார்கள். ஒரு கட்டு ஜாதகத்தோடு உள்ளே நுழைந்த செல்வ விநாயகம், ஜாதகக் கட்டை மேஜைமேல் வைத்தார். பின்பக்கம் உள்ள தோட்டத்திற்குப் போய் கை கால்களைக் கழுவிக் கொண்டு திரும்பவும் கூடத்திற்கு வந்தார். தலைக்கு துண்டை மடித்துக் கொடுத்து கயிற்றுக் கட்டிலிலேயே சாய்ந்தார்... சத்தமிட்டு ஓடிக் கொண்டு இருந்த பழைய ஃபேனை பார்த்துக் கொண்டிருந்தவர்... நினைவிற்கு வந்தது போல் சமையல்கட்டு பக்கம் திரும்பி...

''சாரதா'' என்றார்.

''.........''

''சாரதா'' திரும்பவும் அழைத்தார்.

உள்ளே இருந்து வெளியே வந்த பாரதி ''அம்மா இல்லப்பா'' என்றாள்.

''எங்க போயிருக்கா?''

''பண்ணைக்கு.''

''சரி! இங்கே வா'' வந்து நின்றவள் என்ன என்பதுபோல் பார்த்தாள். சிறிது நேரம் சலனம் இல்லாமல் அவளையே பார்த்தார்... பாரதி இந்த வீட்டிற்கு வந்து பனிரெண்டு வருடங்கள் ஆகிவிட்டன. என்னமோ காலம் போயிடுச்சி. பாரதிகூட அசுர வளர்ச்சிதான். நேற்று நிலைப்படியைத் தடுமாறிப் பிடித்துக் கொண்டிருந்ததுபோல் இருக்கிறது. ஆனால் இன்று பதினாலு வயது குட்டிப் பெண். எதற்கெடுத்தாலும் முதலிடம். இரண்டாவது என்பதற்கே இடம் இல்லை. கொஞ்ச நாட்களாகத்தான் பாரதிக்குள் ஏதோ குழப்பம். தெளிவில்லாத சதா சிந்தனையாக இருக்கும் முகம். இன்று என்ன என்று கேட்டு விடுவது என்ற அர்த்தத்தோடு அவளையே பார்த்தார்.

''அப்பா!'' பாரதி அவரின் எண்ண ஓட்டங்களைத் தடுத்து நிறுத்தினாள்.

''இம்.''

''கூப்பிட்டீங்க, ஒண்ணுமே சொல்லலை.''

''இங்க வா..'' அருகில் அழைத்தார். பக்கத்தில் வந்து நின்றாள்.

''ஏன் எங்கிட்ட சரியா பேசமாட்டேங்கற?''

''.........''

''சொல்லும்மா.''



''உங்ககிட்ட ஒண்ணு கேக்கணும்பா'' மெதுவாக முனகினாள்.

''கேளும்மா.''

''நான் யாருப்பா?''

செல்வ விநாயகத்துக்கு எங்கோ கீறல் விழுந்தது.

''அசடு... நீ எம்பொண்ணு. கடைசி கடைசின்னு பிறந்த செல்லக்குட்டி.'' செல்வவிநாயகம் சொன்னவுடன், சத்தம் இல்லாமல் கன்னங்களில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டு இருந்தாள் பாரதி.

''நீங்க நல்லாவே பொய் சொல்றீங்கப்பா...'' கேவலோடு வார்த்தைகள் வெளியே வந்தன.

''என்னம்மா'' பதறிப்போய் படுத்து இருந்தவர் கட்டிலில் இருந்து எழுந்து உட்கார்ந்தார்.

''பொய் பேசறது தப்புன்னு எனக்குச் சொல்லிக் கொடுத்திட்டு.. நீங்களே பொய் பேசறீங்களேப்பா.''

''நானா... பொய்யா... என்னடா கண்ணா சொல்ற?''

''ஆமாம்பா... நீங்கதான் பொய் சொல்றீங்க... நான் இந்த வீட்டுப் பிள்ளை இல்லை. எனக்கு ரெண்டு வயசு ஆகும் போதே என்னோட அம்மா தூக்குப் போட்டுகிட்டு செத்துட்டாங்க. நான் கெட்ட நேரத்தில பொறந்துட்டதுனால, என்னைக் காப்பாத்த நீங்களும், அம்மாவும் தூக்கி வந்துட்டீங்க... ஆனா, நான் வந்ததுல இருந்தே வீட்லேயும் வசதி குறைஞ்சி போச்சி இல்லப்பா?''

அவள் பேசப்பேச செல்வ விநாயகத்திற்கு வேர்வை சுரப்பிகள் குப்பென பூக்கத் தொடங்கின. நாடி ஆட்டம் கண்டது. யார்? யார் இதை இவளிடம் சொன்னது? பாரதியைத் தூக்கி



வந்த அன்றே தன் குழந்தைகள் ஒவ்வொன்றையும் அழைத்து பாரதி அவர்களின் தங்கை என்று கூறி கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் அவர்கள் நம்பும்படியாக பதில் கொடுத்து, பொத்திப் பொத்தி வைத்திருந்த அழகுக் கண்ணாடியை யார் கீழே போட்டு உடைத்தது? அவள் தாய் இறந்தது, இவள் பிறந்த நேரம் சரியில்லை என்பதெல்லாம் எனக்கும் சாரதாவிற்கும் மட்டும்தானே தெரியும். குழம்பிப் போனவர் தீர்க்கமாக பாரதியைப் பார்த்தார்.

''யார் உனக்குச் சொன்னது?''

''உண்மையா? பொய்யான்னு மட்டும் சொல்லுங்கப்பா...'' கோபம் கலந்த அழுகையோடு கேட்டாள்.

''.......''

''ஏம்பா... பேசமாட்டேங்கறீங்க... உண்மைதானே?''

''பாரதி! உம் மனச யாரோ கலைச்சி இருக்காங்க.'' ஆதரவாக முதுகு தடவ கைதூக்கினார். ஒதுங்கிக் கொண்டாள்.

''நீங்க எதுக்கு எங்கிட்ட பொய் சொல்லணும்? என்னைக் கொல்லணும்னு துடிச்ச அந்த அப்பா நாலு நாளைக்கு முன்னாலதானே செத்துப் போயிட்டார்?''

''பாரதீ...'' கட்டிலைவிட்டு எழுந்து நின்றார்.

''எனக்குத் தெரியும்பா... எனக்கு எல்லாம் தெரியும். உங்களுக்கு ஆள் வந்தது அம்மாவும் நீங்களும் பேசிகிட்டு இருந்தது. கொஞ்ச நேரம் கழித்து எதுவும் சொல்லாமத் தோட்டத்துக்கு என்னைக் கூட்டிகிட்டுப் போய்... தலையோட நடுங்க நடுங்க பச்சைத் தண்ணியை ஊற்றி பூஜை ரூம்ல சாமி கும்பிடச் சொன்னபோது... எனக்கு எதுவுமே தெரியாதுன்னு அம்மா நினைச்சாங்க... ஆனா, எல்லாத்தையும் நான் கேட்டுட்டேம்பா...''



மிருதுவாக அவள் புஜத்தைப் பற்றித் தூக்கினார். கண்களைத் துடைத்து விட்டார். அவள் நாசியில் வழிந்த நீரையும் துடைத்து.. நெஞ்சில் சாய்த்துக் கொண்டு சமாதானப் படுத்தினார்.

''சட்டப்படி நீ எங்க புள்ள தாயி.. ஒரு நொடிகூட நீ வேற பொண்ணுன்னு நான் நெனக்கல ராசாத்தி. நீ மனச குழப்பிக்காத.. நீ அழுதா எம்மனசு தாங்காதுடா.. கடவுளுக்கு எல்லாம் தெரியும். யாராருக்கு என்னென்ன எந்தக் காலத்துல கொடுக்கணும்னு.. தப்பிப்போய் அங்கே பொறந்துட்ட.. இல்லன்னா.. இங்கே வரமுடியுமா?

''கண்ணைத் துடை.. இங்கே பாருடா.. இந்த விஷயம் உனக்கு தெரியுமின்னு சாரதாவிற்குத் தெரியக்கூடாதும்மா.. அதை அவளால தாங்கிக்க முடியாது.''

''சொல்லமாட்டேம்பா'' அழுகையோடு கூறினாள். அதுவரை திண்ணையில் அமர்ந்து இவர்கள் பேசியதை கேட்டுக்கொண்டு இருந்த சின்னமகள் சுமதி சப்தம் இல்லாமல் தெருவில் இறங்கி... பால்பண்ணையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.



## 2

அரவிந்தனின் நிச்சயதார்த்தம் முடிந்து இருந்தது. அரவிந்தன் மேல் உள்ள நம்பிக்கையில் எட்டு பவுனில் தாலிக்கொடி போடுவதாக ஒத்துக்கொண்டார் செல்வவிநாயகம்... திருமணத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு... எல்லாப் பிள்ளைகளும் வீட்டிற்கு வந்தாயிற்று.

''அரவிந்தா, பொண்ணு புடிச்சி இருக்கில்ல?'' சாரதா கேட்டாள். தலையாட்டினான். கோவை தட்ப வெப்பம் அவனுக்கு நல்ல கலரைக் கொடுத்து இருந்தது. நல்ல, உயரம். பெண்மை கலந்த முகச்சாயல். கருமை கலக்காத உதடுகள். அடர்ந்த ரோமம் சூழ்ந்த பரந்த தோள்கள்.

''உங்கப்பா எட்டு பவுன்ல தாலிக்கொடி போட்றதா ஒத்து கிட்டார்'' நிமிர்ந்து பார்த்தவன் ஒன்றும் பேசாமல் சாப்பிடத் துவங்கினான்.

''என்னப்பா. ஒண்ணும் பேசமாட்டேங்ற?''

''நான் சொல்ல என்னம்மா இருக்கு? நீங்க பாத்து செய்ய நீங்க.. செய்ங்க.''

''குடும்ப நிலைபத்தி உனக்குத் தெரியாதாடா.. எட்டு பவுன் கிட்டதட்ட 32,000 ரூபாயத் தாண்டும் என்ன பண்றது?''

''என்னை என்ன பண்ணச் சொல்றீங்க?''

''உங்கிட்ட எவ்வளவு பணம் இருக்கு?''

''பணமா? எங்கிட்டையா?'' தட்டில் கையைக் கழுவி, தோளில் கிடந்த துண்டில் வாய் துடைத்தான்.

''வேலைக்குப் போனதுல இருந்து...'' இழுத்தாள்.

''என்னம்மா... விளையாடுறீங்களா.. எங்கிட்ட ஏது பணம், என்னோட செலவுக்கே அங்கே புடி.. இங்கே புடின்னு இருக்கு..'' எரிந்து விழுந்தான்.

அதுவரை தாயும் மகனும் பேசிக் கொண்டிருந்ததை நிலைப்படியில் நின்று கவனித்துக் கொண்டு இருந்த செல்வ விநாயகம் உள்ளே வந்தார்.

''அரவிந்தா.''

''சொல்லுங்கப்பா.''



''நீ நல்ல வேலையில இருக்கங்கறது தெரியும். இதுநாள் வரைக்கும் உனக்கு எவ்வளவு சம்பளம்னு கேட்டு இருப் போமா? நீயும் சொல்லலை.. இருந்தும் எதுவும் கேட்டு கிட்டது இல்லை. உம்மேல உள்ள நம்பிக்கைதான் அதுக்குக் காரணம். நீ அப்படி என்ன செலவு பண்ணினன்னுகூட நான் கேட்கப் போறது இல்லை... எங்களுக்குன்னு உள்ள கடமை களில் நாங்க குறை வைக்க மாட்டோம்.''

அதற்கு மேல் அரவிந்தன் அங்கு நிற்கவில்லை.

''அம்மா வெளியே போயிட்டு வரேன்'' சொல்லிவிட்டு சட்டையை மாட்டிக்கொண்டு கிளம்பினான்.

''இப்ப என்ன பண்றது... அரவிந்தன் இப்படிச் சொல்றான்.. இன்னும் கல்யாணத்துக்கு ரெண்டு வாரம்தானே இருக்கு?''

முகத்தை இடதுகையால் அழுந்தத் துடைத்தவர், விரக்தி யான வேதனைச் சிரிப்பு ஒன்றை உதிர்த்தார்.

இவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போதே...

''அப்பா!'' அழைத்துக் கொண்டே மீரா வந்தாள்.

''உங்களைப் பார்க்க ராமசாமி மாமா வந்திருக்காங்க.. திண்ணையில் உட்கார்ந்து இருக்காங்க...''

''வரேன்னு சொல்லும்மா.''

''தண்ணி கேட்டாங்கப்பா'' என்றபடி குடத்தில் இருக்கும் தண்ணீரைக் குனிந்து எடுக்கும்போது தாவணியின் மடிப்பில் சிக்கி உள்ளே மாட்டியிருந்த செயின் வெளியே தொங்கியது. செல்வவிநாயகத்தின் கண்கள் ஆடிக் கொண்டிருந்த அந்த செயினையே வெறித்துப் பார்த்தது. மீரா தண்ணீர் எடுத்துக் கொண்டு நகர்ந்ததும்,

''சாரதா!''



''ம்.''

''மீரா கழுத்துல இருக்கிற செயின் இரண்டரை பவுன் தானே?''

கலவரமாய்ப் பார்த்த சாரதா.. ''இம்'' என்றாள்.

''பாரதிக்கும், சுமதிக்கும் இந்த மாதிரி செயின் இருக் குல்ல?''

''........''

''மூணு பேர் கிட்டேயும் எப்படியாவது பேசி செயின வாங்கிடு.''

விருட்டென எழுந்து நின்றாள் சாரதா.

''என்னால முடியாது. எங்கிட்டேதான் ஒரு குண்டுமணி தங்கம்கூட தங்கல. வயசுக்கு வந்த புள்ளைங்க கழுத்துல, வாயக்கட்ட, வயத்தக்கட்டி போட்டு இருக்கோம். இப்ப அதையும் கேக்கறீங்களா? நாளைக்குப் பொண்ணுன்னு பார்க்க வந்தா... வெறும் கழுத்தோட நிக்கச் சொல்றீங்களா? வேண்டாங்க... வேண்டாம்...''

தலையை இறுக்கிப் பிடித்துக் கொண்ட செல்வ விநாயகம்.

''உனக்கு இருக்கிற அக்கறை எனக்கும் இருக்கு... வேற வழி இல்லை. எப்படியாவது பேசி செயினை வாங்கு.''

''நீங்களே வாங்கறது?'' கோபமானாள்.

''இத்தனை வருடம் எங்கூட வாழ்ந்தும் என்னை நீ புரிஞ் சிக்கலையே'' அவருடைய கண்களும் கலங்கத் தொடங்கின.

''என்னால கேக்க முடியாது. திரும்ப எப்பப்பா செஞ்சிப் போடப் போறீங்கன்னு கேட்டா.. பதில் சொல்ல முடியாம என் நெஞ்சே வெடிச்சிப் போயிடும்... என்னால முடியாது சாரதா... போட்டு அழகு பார்த்த இந்தக் கையாலேயே, கழட்டச்



சொல்லி நீட்ட முடியாதும்மா...'' குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தார்.

பதறிப்போன சாரதா தன் கணவனின் தோளைப் பற்றும் போது..

''அப்பா...!''

கண்களைத் துடைத்துக் கொண்டு திரும்பியவர்.. மீராவின் கைகளில் மூன்று தங்கச் சங்கிலிகள் தொங்குவதைப் பார்த்து ஸ்தம்பித்தார்.

''மீ..ரா..'' வார்த்தைகள் வெளிவர மிகவும் சிரமப்பட்டன.

''உங்களோட கௌரவத்துக்கு முன்னால, இந்த செயின் கால் தூசிப்பா'' செயின்களைக் கையில் திணித்துவிட்டுப் போகும் மகளைப் பார்க்க முடியாத அளவு கண்களில் நீர் அரும்பியது.



## 3

இரவு 1.00 மணிக்கு மேல் இருக்கும் தூங்கவும், முடியா மல் விழிகளைத் திறக்கவும் முடியாமல் இரண்டும் கெட்டான் நிலையில் இருந்தாள் ராதா. மெல்லிய அவள் சேலைத் தலைப்பு மார்பு விட்டு நழுவிக் கிடந்தது. போர்வைகூட முற் றிலும் அவளைப் போர்த்த முடியாமல் பேருக்கு இருக்கின் றேன் என்பதுபோல் ஒதுங்கியிருந்தது. அவளுக்கு இரு பக்கமும் சுமதி, பாரதி, மீரா என்று மூவரும் ஆளுக்கொரு கோணத்தில் சுருண்டிருந்தார்கள். ராதாவின் கண்கள் செருக ஆரம்பித்த விநாடி, அவள் மார்பில் யாரோ கை வைப்பது போல் உறுத்தியதும் சடார் என கண் விழித்தவள் எதிரே சாரதா. ஜீரோ வாட்ஸ் வெளிச்சத்தில் தெளிவாகத் தெரிந்தாள்.

''தப்பா எடுத்துக்காதேம்மா. தோட்டத்துப் பக்கம் போகலாம்னு எந்திரிச்சேன். உனக்கு சேலை விலகிக் கிடந்தது. அதான் இழுத்து விட்டேன் தூங்கு.''

''தோட்டத்துப் பக்கம் போகணும்னா, வா, துணைக்கு நிக்கறேன்.''

போர்வையை விலக்கிவிட்டு எழுந்தாள் ராதா. இரவு தேவதையா? அப்படி ஒரு அழகு.. இடுப்பிற்குக் கீழே விழும் கூந்தல். எது எது எப்படியெப்படி, எங்கெங்கெல்லாம் இருக்க வேண்டுமோ. அதது அந்தந்த இடத்தில் அவ்வளவு அற்புதமாக இருந்தது. அரவிந்தன் எல்லா விதத்திலும் கொடுத்து வைத்தவன் என்று இவளின் காதுபடவே பலர் பேசிக் கொண்டார்கள். கலைந்த கூந்தல், பாதி தூக்கத்தில் சொக்கும் விழிகள். சேலை சில இடங்களில் நழுவி அழகு சிற்பமாக இருக்கும் தன் மருமகளின் கைகளைத் தன் சொறசொறப்பான கைகளில் பற்றினாள் அந்த மாமியார்.

திண்ணையில் ஒரு கயிற்றுக் கட்டிலைப் போட்டு செல்வ விநாயகம் படுத்திருந்தார். வீட்டில் இருக்கும் இரண்டு அறைகளில் ஒன்றில் சிவாவும், மற்றொன்றில் அரவிந்தனும் படுத்துக் கொண்டார்கள். பெண்கள் எல்லோரும் கூடத்தில்.

திருமணம் முடிந்து பத்து நாட்களுக்கு மேலாகி விட்டது. இன்னும் இரண்டு நாட்களில் தம்பதிகள் கோவைக்குப் புறப்பட வேண்டும். ஆனால் ராதா இன்னும் சரியாக யாரிடமும் பேசவில்லை. தயக்கம் இருந்து கொண்டிருந்தது. ஆடிப்பதினெட்டு முடிந்து போகலாம் என்றதற்கு... அரவிந்த் லீவ் கிடையாது என்று ஒத்துக் கொள்ளவில்லை. சாரதாவின் தோளில் ராதா லேசாகக் கைவைத்தாள். துருத்திக் கொண்டிருந்த சாரதாவின் தோள் எலும்பு, ராதாவின் மென்மையான கைகளில் உறுத்தியது.

''என்னம்மா'' கண்களில் பாசத்தை தேக்கி கேட்டாள்.



''தூக்கம் வரலை'' கிளி கொஞ்சியது.

''கொஞ்சம் திருநீர் வச்சிவிட்றேன் தூங்கு.''

''ம்கூம்... உங்ககிட்டே பேசணும்.''

''இந்த ராத்திரியிலயா... தூங்குமா காலையில பேசிக்கலாம்.''

''இல்லை. நீங்க எப்பப் பார்த்தாலும் ஏதாவது வேலை செஞ்சிகிட்டே இருக்கீங்க. இல்ல யாராவது உங்ககிட்டே பேசிகிட்டு இருக்காங்க.''

''சரி.. என்ன பேசப் போற.''

''உங்களுக்குத் தூக்கம் வருதா?'' சந்தேகமாகக் கேட்டாள்.

''இல்லம்மா, என்னைக்கு கழுத்துல மூணு முடிச்சு விழுந்துச்சோ, அன்னையில இருந்து இன்னைக்கு வரைக்கும் தூக்கம் இல்லை.'' அனுபவமான வார்த்தைகள் வெளிவந்து விழுந்தன. பாரதியை சுமதியின் பக்கமாகப் புரட்டிப் படுக்க வைத்துவிட்டு மறுபக்கத்தின் ஓரமாக சாரதாவிற்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள் ராதா.

''சொல்லும்மா'' ஆதரவாக தலை தடவினாள்.

''தூங்கறவங்க முழிச்சிட மாட்டாங்களே?''

''மாட்டாங்க... படுத்துட்டா காலையிலதான் கண்ணைத் திறப்பாங்க.''

''என்னை உங்களுக்குப் பிடிச்சிருக்கா?''

வித்தியாசமான பார்வை ஒன்றைத் தன் மருமகள் மேல் ஓட விட்டாள்.

''நீங்க எந்த விதத்துல என்னை மருமகளாக்கிக்கணும்னு நினைச்சீங்கன்னு எனக்குத் தெரியாது. ஆனா நான் ரொம்ப



வும் விருப்பப்பட்டு இந்த வீட்டிற்கு வந்தேன். நாலு வயசுலேயே அம்மாவ இழந்தவ. சொந்த பந்தம்னு யாருமே இல்லை. அந்த வெறி தனிமை எங்கப்பாவை பணம் சம்பாதிக்க தூண்டிச்சே தவிர.. என்னைப் பார்த்துக்கணும்னு தோணல, அதுக்கு அவருக்கு நேரமும் இல்லை. நான் பணக்கார வீட்டுப் பொண்ணா இருக்கலாம். படிச்சிருக்கலாம். அதைவிட உங்க மருமகள்ங்கறதுதான் சந்தோசமா இருக்கு.. அந்த வீட்டுல ஒரு நாள் கூட என்னோட சேர்ந்து யாரும் சாப்பிட்டதுகூட இல்லை. ஆனா இங்கே.. நீங்க பாத்து பாத்து போட்றது, தனக்குப் பிடிச்சது என்னோட தட்டுல இருந்தா எச்சில்ன்னு கூட பார்க்காம எடுத்துப் போட்டுகிற மீரா. எனக்குத் தளைய தளையப் பின்னிப் போட்டா நன்றாக இருக்கும்னு, நான் குளிச்சிட்டு வரும்போது சீப்பை எடுத்துக்கிட்டு பின்னிவிட்டாளே ஆச்சுன்னு நிற்கும் சுமதி, எனக்கு கண்ணதாசன் கவிதைகள் பிடிக்கும்னு தெரிஞ்சதும் ''அர்த்தமுள்ள இந்து மதம்'' வாங்கிகிட்டு வந்து கொடுத்த பாரதி. அப்புறம் சிவா. இப்படி எல்லாரையும் எனக்கு ரொம்பப் பிடிச்சி இருக்கு. இந்தப் பாசமும் அன்பும் கடைசி வரைக்கும் இருக்கணும். எனக்கு இங்கே இருந்து கோயமுத்தூர் போகவே பிடிக்கல. நான் போய்ட்டா மறந்திட மாட்டீங்களே?'' சுதி குறைய ஆரம்பித்தது.

சாரதாவிற்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. மூத்த மருமகள் வடிவில் தனக்கு விலையுயர்ந்த மாணிக்கமே கிடைத்து இருப்பதை நினைத்து அழுவதா பெருமிதப்படுவதா என்று தெரியாமல் ராதாவை இழுத்து மார்போடு சேர்த்துக் கொண்டாள். சாரதாவின் ஒடுங்கிய மார்பும், குத்திய எலும்பும், வேர்வை நெடியும் சுருங்கிப் போயிருந்த தோள்களின் மென்மையின்மையும் ராதாவிற்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. இதுவரை தனக்குக் கிடைக்காத ஒன்று கிடைத்துவிட்ட சந்தோசத்தில் மாமியாரின் மடியில் சுருண்டிருந்தாள் அந்த மருமகள்.



''ராதா! நீ இந்த வீட்டு மூத்த மருமக.. எனக்கப்புறம் இந்த சுமையெல்லாம் சுமக்கப் போறவ நீதான். நீ எப்படி இருப்பியோன்னு பயந்தேன். நீ பேசறதைக் கேட்கும்போது மனசுக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு.. நான் எத்தனை நாளைக்கு இருக்கப் போறேன்? எனக்கப்புறம்... இந்தப் பிள்ளைங்களுக்கு அண்ணியும் நீதான், அம்மாவும் நீதான். நீ பாத்துதான் எல்லாத்தையும் செய்யணும். அரவிந்தன் ரொம்ப நல்லவன். கொஞ்சம் முன் கோபக்காரன். பாத்து நடந்துக்கோ.

''நீ இந்த வீட்டு மூத்த மருமக.. நீ வைக்கிறதுதான் சட்டம். உன்னைக் கேட்காம எதுவும் நடக்காது. குடும்பத்த நடத்தறப்ப நிறைய வலியும் வேதனையும் தியாகமும் இருக்கும்மா... அதெல்லாம் பொறுத்துக்கணும். நாம சந்தோசப் படறதைவிட அடுத்தவங்களை சந்தோசப்படுத்திப் பாக்கறதுலதான் சொகம் அதிகம். பொண்ணாப் பிறந்திட்டாலே நிறைய சுமக்கணும். வயித்துல புள்ளைய, மனசுல புருஷன, தோள்ள சுத்தியிருக்க உறவை, முதுகுல அவமானத்தை, இப்படி எல்லாத்தையும் சுமக்கணும்மா.. நீ தாங்கணும், எல்லா பாரத்தையும், எல்லா சந்தோசத்தையும் நீ தாங்கணும்..''

தலையைத் தூக்கி மாமியாரைப் பார்த்தவள் சிரித்தாள்.

''சுமக்க ஆசைப்பட்டுத்தானே வந்திருக்கேன்.''

''அரவிந்தன் நல்லாப் பேசறானா?''

''ம்.'' வெட்கத்தோடு சிணுங்கினாள்.

''ஊருக்குப் போனதும் பாத்து நடந்துக்கோ, இது ஆடி மாசம்... சாந்தி முகூர்த்தத்திற்கு ஆடி முடிஞ்சதும் குறித்து கடுதாசி போடச் சொல்றேன். அதுக்குள்ளே அவசரப்படப் போறான்.''

''.........''

''இதெல்லாம் நான் பேசறேன்னு பாக்குறியா?... உனக்கு அம்மா இருந்தா சொல்லி இருப்பாங்க, இப்ப நான்தானே சொல்லணும்.''

சிறிது நேரத்திற்குப் பின் சாரதாவின் மடியிலேயே உறங்கிப் போயிருந்தாள் ராதா. மெதுவாக ராதாவின் தலையைத் தூக்கி தலையணையில் வைத்துவிட்டுப் போர்வையை இழுத்து கழுத்துவரை போர்த்திவிட்டாள். நிம்மதியா சந்தோசமா... பிரித்துப் பார்க்க முடியாத உணர்வில் தூக்கத்தைத் தொலைத்து இருந்த சாரதாவிற்கு புரண்டு படுக்கும் சத்தமும், கோரைப்பாயின் சத்தமும், இழுத்து விடும் மூச்சின் சத்தமும், ஓட்டைக் கடிகாரத்தின் ஓசையும் ஃபேனின் கடகட சத்தமும் கலந்து கலவையாக ஒலித்துக் கொண்டு இருந்தது. இருட்டில் அமைதியாக உன்னிப்பாக இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள் சாரதா.

அடுத்த நாளே காலேஜுக்கு மீராவும், சிவாவும் மூட்டையைக் கட்டி இருந்தார்கள். சாரதா எங்கோ வெளியே கிளம்பிப் போயிருந்தாள்.

பாரதியும், சுமதியும் டியூசன். கொல்லைப்புறத்தில் தனியாக ராதா துவைத்துப் பிழிந்து வைத்திருந்த துணிகளைக் கொடியில் உலர்த்திக் கொண்டிருந்தாள். பின்னாலேயே வந்து நின்றான் அரவிந்தன். நெருங்கிப் பின்னால் நின்றபோது, அவன் மூச்சுக்காற்று உஷ்ணமாக கழுத்துப்புறம் பரவ திடுக்கிட்டுத் திரும்பினாள்.

''பயந்துட்டியா?'' புன்முறுவல் பூத்தான்.

''இம்.''

''எங்கிட்ட பயமா?'' காதுமடலில் வார்த்தைகளை நசுக்கினான்.

''ம்கூம்.'' தலையாட்டினாள்.



''ஏதாவது பேசேன், இப்போதான் யாருமே இல்லையே?''

''என்ன பேசணும்?''

''நாம ரெண்டு பேரும் பேச எத்தனையோ விஷயம் இருக்கு. விஷயமா இல்ல?'' கன்னம் குழிவிழ சிரித்து அவள் கைவிரல்களைப் பற்றினான்.

''இந்த வீட்ல நம்மால ஃப்ரியா பேச முடியலதானே?''

''அப்படியெல்லாம் இல்ல, எனக்கு ரொம்பப் புடிச்சிருக்கு.''

''நாளைக்குக் காலையில கோயமுத்தூர் போறோம் தெரியுமில்ல?'' என்றவன் அவளைத் தோட்டத்தில் உள்ள மாமரத்தின் கீழே போட்டு இருந்த சலவைக்கல் மேல் உட்கார வைத்து தானும் அவள் அருகிலேயே உட்கார்ந்தான்.

''வாசல் கதவு திறந்தே இருக்கு'' தயங்கியபடி எழ எத்தனித்தாள்.

''உட்கார், யாரும் வரமாட்டாங்க.''

''நாளைக்கு நாம ரெண்டு பேரும்தானே இருப்போம். இன்னைக்கு மட்டும்தான் இங்கே இருக்கப் போறோம். அம்மா, அப்பாவோட டைம் ஸ்பெண்ட் பண்ணுங்களேன். சரியா யார்கிட்டேயும் பேசமாட்டேங்றிங்க?''

''என்ன பேசணுங்கற?'' சன்னமாகக் கோபம் வெளிப்பட்டது.

''இவங்களை எல்லாம் விட்டுட்டு நாளைக்குப் போறோம்ங்கற போதே எனக்குக் கஷ்டமா இருக்கு.''

''எனக்கு அப்படி ஒன்றும் இல்லை. எப்படா இந்தத் தொல்லையில இருந்து விடுபடுவோம்னுதான் இருக்கு...'' அலட்சியமாகப் பேசினான்.

''என்னங்க... நீ...ங்...க?''



''இங்கே பார் ராதா. சென்டிமென்டா பேசாத. ப்ராக்டிகலா திங் பண்ணு, இந்த அத்தை, மாமா, சுமதி, மீரான்லாம் புலம்பாதே. இதெல்லாம் நமக்கு வேண்டாம்.''

பேசத் தோன்றாமல் அவனையே பார்த்தாள்.

''அப்பவே எனக்கு நெருடுச்சி, நீ ரொம்ப ஒட்டிடுவியோன்னு, சரியாயிடுச்சி. இனிமே யார்கிட்டேயும் சரியா பேசாதே.. ஆரம்பத்துலேயே விலக ஆரம்பிச்சிடு. மூத்த பிள்ளைன்னு பேசி பொறுப்புக்களை கொடுத்தாங்கன்னா... உன்னைக் கைகாட்டி விலகிடலாம்னு ஐடியா பண்ணியிருக்கேன்... நீ என்னடான்னா?''

'ச்சே... எவ்வளவு சுயநலக்காரன்.. எந்த விஷயத்திற்கும் எம்பொண்டாட்டி சரியில்லைன்னு என்னைக் கைகாட்டப் போறானாமே. நெஞ்சு அதிர்ந்து அதிர்ந்து அடங்கியது. 'வரப் போற பொண்ணுதான் எப்படியிருப்பாளோன்னு பயப்படுவாங்க. இப்படிப்பட்ட ஆம்பளை கூடவா உண்டு...' ராதாவிற்கு யோசிக்கவே முடியவில்லை. அரவிந்தனே மேலும் தொடர்ந்தான்.

''விலகியே இரு.. இல்லன்னா எல்லாத்தையும் நம்ம மேலேயேக் கட்டிடுவாங்க புரியுதா?''

''நீங்க வீட்டுக்கு மூத்த பிள்ளைங்க...?''

''இருக்கட்டுமே... அதுக்காக, எல்லாத்தையும் என் தலையிலேயே கட்டணுமா? நான் நைசா கழண்டுக்குவேன், கல்யாணம் நடக்கட்டும்னுதான் அமைதியா இருந்தேன்.''

''ஒதுங்கிடப் போறீங்களா? மூணு தங்கச்சி, ஒரு தம்பி.''

''இருக்கட்டுமே... நமக்காகத்தான் சொல்றேன். இந்த வீட்டுல சொத்தும் வேண்டாம் ஒண்ணும் வேண்டாம்... எந்தப் பிரச்சினையும் நமக்கு வேண்டாம்.''



''இது நல்லா இல்லைங்க... இவங்களுக்கு ஏது சொத்து.. எல்லாத்தையும் வித்து, உங்க எல்லாத்துக்கும் செலவு பண்ணிட்டாங்களே.''

''ப்ச்.. சென்டிமெண்டா பேசாதே.. ஏன் என்னோட தம்பி பாத்துக்கட்டுமே.. எனக்கு மட்டுமா செலவு பண்ணினாங்க.. மீராவும், சுமதியும்தான் சொந்த தங்கைங்க.. பாரதி எடுத்து வளர்த்த பொண்ணு.. இதுங்களுக்கு எல்லாம் கல்யாணம் பண்ணிக் கொடுக்கங்காட்டியும் மனுசன் செத்துடுவேன். ஒரு பைசா சேர்க்க முடியாது.''

அரவிந்தன் கைகளை மெல்லப் பற்றினாள் ராதா.

''வீட்டிற்கு முதல் பிள்ளை. இப்படியெல்லாம் நெனைக்கக் கூடாது. மாமாவும், அத்தையும் உங்களைத்தானே சொத்தா நினைச்சிக்கிட்டு இருக்காங்க.. வேண்டாங்க. இந்தக் கெட்ட எண்ணம் உங்களுக்கு வேண்டாம்... பெத்தவங்க மனசு கஷ்டப்பட்டா நாம நல்லா இருக்க மாட்டோம். ஒரு ஆம்பளை பெத்தவளுக்கு போட்ற சாப்பாட்டிற்கும், அக்கா தங்கச்சிக்கு செய்ற சீருக்கும் கணக்கு பாக்கக்கூடாதுங்க.''

''தலையில துண்டை போட்டுக்கச் சொல்றீயா.. உனக்கு நிறைய அட்வைஸ் பண்ண வேண்டியிருக்கு. இந்த பந்தம் பாசம் எல்லாம் வேணாம். நீ பேசற மாதிரி நானும் டயலாக் பேசுனா, காலம் முழுக்க யாரையாவது எதிர்பார்த்துக்கிட்டுதான் இருக்கணும். பணத்துக்கு முன்னால அம்மாவாவது, அப்பாவாவது... உனக்கு தாலி செய்யணும்னு அப்பா எங்கிட்டே பணம் கேட்டார், நானும் இருக்குன்னு சொல்லி பணம் கொடுத்து இருந்தேன்னா... கோயமுத்தூர்ல எம்பேருக்கு ஒரு ப்ளாட் வாங்கிப் போட்டு இருக்க முடியுமா?''

''இந்தத் தாலிக்குப் பணம்?'' சந்தேகமாகக் கேட்டாள்.

சிரித்தான்.

''தங்கச்சிங்களோட செயின்தான். நான் இருக்குன்னு சொல்லி யிருந்தேன்னா என்னோட பேங்க் பேலன்ஸ் குறையும். நாம இல்லங்கறதுனல எந்தக் காரியமும் நின்னுடாதுங்கறப்ப.. எதுக்காக இழுத்துப் போட்டுக்கணும்?''

''தப்புங்க.. இது ரொம்பத் தப்பு.. நீங்க செயினா செஞ்சி போட்டு அழகு பார்க்க வேண்டியவங்க கழுத்துல இருந்து, நீங்களே பறிக்கலாமா?''

''உஷ்'' உதட்டில் கைவைத்து அதட்டினான். ''நீ என்னை நம்பி வந்திருக்க. மத்த யாரும் உனக்குத் தேவையில்லை ஓ.கே.'' அவள் தாடையைத் தட்டிவிட்டு ''காபி போடு லேசா தலையை வலிக்குது.'' என்றபடி நகர்ந்தான். பிரமை பிடித் தாற்போல் நின்றாள் ராதா. அந்த நல்ல உள்ளங்களுக்கு இப்படி ஒரு மகனா? அரவிந்தனைப் பற்றித் தெரியாமல் கழுத்தை நீட்டி விட்டோமா? ஆரம்பத்தில் இருந்து பெற்றவர்களின் வேர்வையிலும், ரத்தத்திலும், வளர்ந்தவன் கொஞ்சம் கூட கடமை உணர்வில்லாமல், மனசாட்சி வேண்டாம்? பச்சை துரோகமா இருக்கே. இவரை மலைபோல நம்பி இருக்கும் அவர்கள் தெரிஞ்சா தாங்குவாங்களா? இவரைத் திருத்த முடியுமா? ரத்த பந்தத்திடமே கணக்கு பார்ப்பவனைத் திருத்த முடியுமா? அவள் கட்டிய அன்புக் கோட்டை, மானசீகமாக பொலபொலவென உதிர்வதை உணர்ந்தாள். கழுத்தில் கிடக்கும் தாலிக்கொடி கல்லைக் கட்டித் தொங்க விட்டது போல் கழுத்தை இழுத்தது.

அதுவரை தன் வீட்டு மாமரத்தின் வேர்கள் தன் வீட்டு சுவரிலேயே ஊடுருவி, வெடிப்பை உண்டு பண்ணுவதைக் கவலையோடு தெருப்பக்கம் நின்று கவனித்துக் கொண்டிருந்த செல்வநாயகத்தின் காதுகளில் அரவிந்தனின் ஒவ்வொரு சொல்லும் அம்பாகச் சொருகி நின்றது. உடல் சதைகள் ஆட, சுவற்றைப் பிடித்தபடி தாங்கி நின்றார்.



அன்று இரவு சாப்பிடுவதற்கு முன்பாக சாரதாவின் அருகில் வந்து நின்றாள் ராதா.

''அத்தை!''

''என்னம்மா?''

''சாமி படத்திற்கு முன்னால வர்றீங்களா?''

''எதுக்கு?'' கேள்வி முடிச்சிட்டது.

''வாங்க.''

சாமிபடத்திற்கு முன்னால் சாரதா வந்து நின்றதும். தன் கைகளில் மறைத்து வைத்திருந்த மஞ்சள் துண்டு முடிந்த மஞ்சள் கயிற்றைத் தானே கட்டிக் கொண்டு எட்டுப் பவுன் தாலிக் கொடியை அநாயாசமாகக் கழற்றி, கண்களில் ஒற்றிக் கொண்டு சாரதாவின் கைகளில் திணித்தாள்.

''ராதா! என்ன காரியம் பண்ணிட்ட?'' வீறிட்டாள் சாரதா.

''இந்த பவுன் தாலி உறுத்துதத்தை, மஞ்சள் கயிறே மங்களமா இருக்கு.'' சொல்லிவிட்டு நிம்மதி கலந்த சிரிப்பைத் தன் இதழ்களில் படர விட்டாள். பின்பு எல்லோருக்கும் சாப்பாடு போடத் தட்டுக்களை எதுவும் நடக்காதது போல் கழுவ ஆரம்பித்தவளை செல்வ நாயகத்தைத் தவிர மற்ற அத்தனை பேரும் துடிக்க மறந்த இதயத்தோடு பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.



## 4

மீரா கல்லூரிப் படிப்பை முடித்தாள். எம்.எஸ்ஸி போனாலே ஆச்சு என்று மும்முரமாக இருந்தாள். சுமதி கல்லூரித் துவக்கம். பாரதி பனிரெண்டு. சிவா வேலைக்குப் போக ஆரம்பித்தான்.



மாதம் தவறாமல் அவன் பணம் அனுப்பத் தவறுவதில்லை. சிவா என்ற நம்பிக்கைக்கொடி விருட்சமாக வளரத் துவங் கியது. அரவிந்தனிடம் இருந்து ஒரு கடிதம் வருவதே ரஷ்ய அமெரிக்க ஒப்பந்தம் போல் அரிதாக இருந்தது. ராதாதான் மாதம் தவறாமல் கடிதம் எழுதினாள். இரண்டு பேருமே அவர் அவர் எண்ணத்தில் இருந்து எள்ளளவும் மாறவில்லை என்பதற்கு அவர்கள் எழுதும் கடிதமே சாட்சியாக இருந்தது. இதில் மாமனாருக்கும், மாமியாருக்கும் ராதா உண்டாக வில்லையே என்ற கவலை வேறு.

மீரா திருமணம் வேண்டாம் என்று மறுத்ததால் அவளைக் கட்டாயப்படுத்துவதைவிட சிவாவிற்கு திருமணத்தை முடித்து விடலாம் என்ற எண்ணம் செயல்பட்டது. ஏழைப் பெண் ணாக வலை வீசித் தேடினார்கள். மூக்கும் முழியுமாக ஜானகி கிடைத்தாள். திருமண விசேஷம் முடிந்து பழைய சூழ் நிலைக்கு அந்த வீடு திரும்பிக் கொண்டு இருந்தது. ஜானகி, ராதாவிற்கு நேர்மாறாக இருந்தாள். பக்கத்தில் உள்ள துரும்பைக்கூட அந்தப்புறம் எடுத்துப் போடுவது இல்லை. தூங்குவது, சாப்பிடுவது, மேக்கப் என்று தன் வட்டத்தை சுருக்கிக் கொண்டாள். எல்லா வேலைகளும் சாரதா மேல் தான் விழும்.

அன்று வழக்கம்போல் தன் டி.வி.எஸ். பிஃப்டியை துடைத் துக் கொண்டிருந்தான் சிவா. சாரதா அருகில் வந்து நின்றாள்.

''சிவா!''

''என்னம்மா.''

''சுமதி லெட்டர் போட்டு இருக்கா.''

''நேத்து சாயந்தரமே படிச்சேம்மா. இன்னைக்கு ஆபீஸ் போனதும் அவளுக்கு மெஸ் பீஸ் அனுப்பிச்சிடறேம்மா.''

வாஞ்சையாக சிவாவின் தலையைத் தடவினாள்.



''ரொம்ப சிரமமா இருக்காப்பா.''

மெலிதாகச் சிரித்தான்.

''அம்மா, கடன்பட்டு தங்கச்சிக்கு கல்யாணம் பண்றது, படிக்க வைக்கிறது இதுலெயும் ஒரு சுகம் இருக்கும்மா... என்னால என் தங்கச்சி படிச்சா, என்னால சந்தோஷமா வாழறாங்கறது எனக்குத்தானே பெருமை.''

''சாப்பிடலையா?''

''போய் எடுத்து வைங்க. அகோர பசி. ஆபீஸ்க்கு வேற லேட்டாயிடும்போல இருக்கு.''

''இதோ ஒரு நொடியில் எடுத்து வைக்கிறேம்பா.. நீ கையக் கழுவிட்டு வா'' சாரதா நகர்ந்ததும், பல் துலக்கிக் கொண்டிருந்த ஜானகி.. எச்சிலை ஒரு ஓரமாகத் துப்பிவிட்டு, குளிர்ந்த நீரினால் முகத்தை துடைத்துக் கொண்டு அவன் அருகில் வந்து நின்றாள்.

''சீக்கிரம் எந்திரிச்சிட்ட போல இருக்கு?''

''உங்களுக்காகத்தான்'' கொஞ்சலாகக் குரல் வெளிப்பட்டது.

''எனக்காகவா?'' சுற்றும் முற்றும் பார்த்தான். அவளை அருகில் இழுத்து கிசுகிசுத்தான். ''தூக்கக் கலக்கத்துலகூட நீ அழகா இருக்க ஜானகி.''

''என்னங்க.''

''ம்.''

''எனக்கு இந்த மூக்குத்தி பிடிக்கல... வேற டிஸைன் வேணும்.''

சிரித்தபடியே அவள் தோளை அணைத்தான்.

''இந்த மூக்குக்கு, மூக்குத்தி அவசியமே இல்ல.''

''இந்தப் பேச்சு வேணாம். வாங்கித் தர்றீங்களா இல்லையா?''

''பணம் இல்ல ஜானகி'' சிவாவின் கண்களை உற்று ஊடுருவிப் பார்த்தாள்.

''உங்க தங்கச்சிக்கு மெஸ்பீஸ் கட்ட மட்டும் பணம் இருக்கா?''

நெஞ்சில் முள் குத்திய உணர்வோடு அவளைப் பார்த்தான்.

''அது அத்தியாவசிய செலவு. ரெண்டு நாள்ல பணம் அனுப்பலன்னா சுமதி படிக்க முடியாது, சாப்பிட முடியாது.''

''ஏன் உங்கப்பா என்ன பண்றார்?''

''ஜானகி!'' அதிர்ந்து கத்தினான்.

''கத்திப் பேசாதீங்க. உங்கப்பா அம்மாவுக்கு சாப்பாடு போட்றது வேணா உங்க கடமையா இருக்கலாம், இவங்களை எல்லாம் படிக்க வச்சி கல்யாணம் பண்ணிக் கொடுக்கணும்னு உங்களுக்கென்ன தலையெழுத்தா?''

ஜானகியின் முடியைக் கொத்தாகப் பற்றியவன் 'பளார்' என தன் பலம் முழுவதையும் அவள் கன்னத்தில் இறக்கினான்.

''இங்க பாருடி... எங்கப்பா அம்மா, தங்கைங்களப் பத்தி பேசுன பொலி போட்டுடுவேன். சுகமா நான் வளந்துடல... இன்னைக்கு பேண்ட் சர்ட் போட்டு டைகட்டி டீக்கா உம் முன்னால நிக்கறேனே... இதுக்கு காரணம் யாரு, எங்கம்மா அப்பாடி... எம் பின்னால போட்டு இருக்க டிகிரி.. இந்த உடம்பு, இந்த சம்பளம், இதெல்லாம் எங்கம்மா, அப்பா போட்ட பிச்சை. நீ பொண்டாட்டியா எனக்கு ஆகறதுக்கு முன்னால அவங்களுக்கு நான் மகன், என்னோட தங்கைகளுக்கு அண்ணன் புரியுதா?''

அழுகையோடு பேச ஆரம்பித்தாள் ஜானகி.

''எனக்கு எல்லாம் புரியுது. நான் இப்படி மோசம் போவேன்னு தெரியலையே. ஒரு மூக்குத்தி கேட்டதுக்கே இந்தப் பாடு



படுத்தறீங்களே. இன்னும் எவ்வளவு கொடுமையைத் தாங்கணுமோ... போங்க போயி உங்கம்மா முந்தானையையே புடிச்சுகிட்டு சுத்துங்க... உங்க தங்கச்சிங்களே பாத்துப்பாங்க... இனிமே நீங்க பேசவே வேண்டாம்.''

பீறிட்டு வந்த அழுகையை சேலைத் தலைப்பால் பொத்திக் கொண்டு தன் அறைக்குள் நுழைந்து தாழிட்டுக் கொண்டாள். சிவா வேகமாக வெளியே போனான்.

வீட்டில் சாரதாவும் ஜானகியும்தான். சாரதா ஒரு ஓரமாக ஒடுங்கிக் கொண்டதும், ஜானகி குளித்து முடித்து தன் அறைக்குள் புகுந்து கொண்டாள். சிறிது கால நேரத்திற்கு பின்பு.

சிவாவின் டூவீலர் வீட்டிற்கு முன் நின்றது.

''அதற்குள் வந்துவிட்டானா?'' எண்ணிக் கொண்டு எழ நினைத்தாள் சாரதா. ஆனால் உடம்பு ஒத்துழைக்கவில்லை. மீண்டும் சுருண்டு கொண்டாள்.

வெளிச்சத்தில் இருந்து வந்த சிவாவிற்கு, வீடு இருட்டாக இருந்தது. படுத்திருந்த தாய் கண்களுக்குத் தட்டுப்படவில்லை. நேராக தங்கள் அறைக்கதவைத் தட்டினான். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு கதவு திறக்கப்பட்டது. திறந்துவிட்டு, போய்ப் படுக்கையில் சரிந்து கொண்டாள். திறந்த கதவை யாரும் இல்லை என்ற தைரியத்தில் சாத்தாமல் விட்டான். ஜானகி பக்கத்தில் போய் அமர்ந்தான் சிவா.

''ஜானகி!''

''..........''

''ஜானகி!''

''.........''

''ஜானு... ஸாரிம்மா, தெரியாம கையை ஓங்கிட்டேன்.''



''........''

''எனக்கு ஆபீஸ்ல வேலையே ஓடல, லீவ் போட்டுட்டு ஓடி வரேன், ப்ளீஸ் பீலிவ் மீ'' ஒருக்களித்துப் படுத்து இருந்தவள் கமுந்தடித்துப் படுத்தாள். அவள் முதுகில் கை வைத்தான்.

''எம்மேலே கோபமா?''

''ரொம்ப சந்தோசமா, ஜிவ்வுன்னு மேலே பறக்கற மாதிரி இருக்கு'' வெடுக்கென பதில் கொடுத்தாள்.

''என்னைப் புரிஞ்சிக்கோ'' கெஞ்சினான்.

''ஒரு மூக்குத்தி கேட்டேன், அது தப்பா?''

''நீ கேட்டது தப்புன்னு சொன்னேனா, இப்போ பணம் இல்லை. சுமதிக்கு பீஸ் கட்டணும், மீராவிற்கும் செலவு இருக்கு, பாரதிக்கு செலவு இருக்கு, நான் ஒருத்தன்தானே சமாளிக்கணும், ரெண்டு மாசம் பொறுத்துக்க.''

''ஏன்.. இந்தப் பொறுப்பு உங்க அண்ணனுக்கு இல்லையா? இந்த வீட்டு மூத்த பிள்ளையே ஒதுங்கி இருக்கும்போது நீங்க ஏன் ஆடறீங்க?''

''ஜானகி!''

''சத்தம் போட்டுப் பேசாதீங்க. எல்லாம் நம்ம நன்மைக்குத்தான் சொல்றேன். உங்க அண்ணன் அண்ணி மாதிரி பொழைக்கக் கத்துக்குங்க. உங்க தங்கைங்க ஒவ்வொருத்திக்கும் ஒரு லட்சம் செலவு பண்ணாம வெளிய தள்ள முடியாது. அப்படி ஒரு குடும்ப கௌரவம், உங்கம்மா எந்த நேரம் பார்த்தாலும் வயித்த புடிச்சிகிட்டு இருமுறாங்க, உங்கப்பா இனிமே உழைக்கிற மாதிரியும் இல்லை.''

''நீ அதிகமா பேசற.. நீ இந்த வீட்டுக்கு வர உங்க வீட்டுல ஒரு லட்ச ரூபாய் செலவு பண்ணினாங்களா?''



''இப்ப எதுக்கு எங்க வீட்ட இழுக்கறீங்க.. உங்கள மாதிரியே எல்லாரும் இளிச்ச வாயங்களா இருந்துடுவாங்களா.. இவளுங்க படிக்கிற வேகத்தைப் பார்த்தா. எஞ்சினியர், டாக்டரா கேப்பாளுங்க.. நம்மாள முடியாது. நமக்கும் நாளைக்கு கொழந்தைங்க பொறக்கும், அவங்களுக்கு அடுத்தவங்க கிட்டே கையேந்திகிட்டு இருக்க முடியாது.''

''இவங்களை எல்லாம் அம்போன்னு விட்டுட்டு உம் பின்னாடி வந்துடச் சொல்றியா?'' கோபத்தில் பற்களைக் கடித்தான். சிவாவின் அருகில் நெருங்கி உட்கார்ந்தாள். அவன் தோளில் முகத்தைச் சாய்த்துக் கொண்டு காது மடலை வலியில்லாமல் தன் பற்களால் தீண்டினாள்.

''நம்மைப் பத்திமட்டும் கவலைப்படுங்க. யாரோ எப்படியோ போறாங்க, நமக்கென்ன கூடப் பிறந்திட்டா தலையில தூக்கி வச்சிகிட்டா ஆட முடியும்? உங்க ஆபீஸ் பக்கத்துலயே வீட்டைப் பாருங்க, நாம போயிடலாம். நல்லா இருக்கியான்னு கேட்டா, நல்லா இருக்கேன்னு சொல்லக்கூடாது. பஞ்சப்பாட்டு பாடணும். அப்பதான் வாய திறக்கமாட்டாங்க, உங்க அண்ணனுக்கு இல்லாத அக்கறை உங்களுக்கு என்ன?''

''என்னைக் குழப்பாத ஜானகி.'' முதல் முறையாகக் குழம்ப ஆரம்பித்தான் சிவா.

''இனிமே படிப்பு செலவெல்லாம் ஏத்துக்காதீங்க. உங்களை விட அதிகம் சம்பாதிக்கிறவர் உங்கண்ணன், அவர் பக்கம் கையக் காட்டிடுங்க. பணம் தாங்க முக்கியம். கையில நாலுகாசு இருந்தாத்தான் மத்தவங்க நம்ம மதிப்பாங்க. உங்க தங்கச்சிங்க யாரும் என்னை மதிக்கிறதே இல்லை. உங்களை எதிர்பார்த்து இருக்கும்போதே இவ்வளவு திமிர்.''

''தனிக்குடித்தனம் போயிடலாங்கறியா?'' சரிய ஆரம்பித்தான். தலைக்கு கைகளைக் கொடுத்து படுத்த சிவாவின் மார்பில் தலை வைத்துப் படுத்தாள் ஜானகி. அவன் பலகீனம்

எங்கெல்லாம் என்று தெரிந்து அந்தந்த இடம் பார்த்துத் தட்டினாள்.

காதில் விழுந்த வார்த்தைகள் அனைத்தையும் கேட்ட சாரதா, அப்போதே செத்துவிட மாட்டோமா என்று துடித்தாள். இது அவருக்குத் தெரிந்தால் எவ்வளவு கஷ்டப்படுவார். எதையும் சொல்லக்கூடாது. பேசாமல் அரவிந்தனோடு போய் விட வேண்டும். வாய்கூசாமல் எப்படிப் பேசிவிட்டாள் என் பெரிய மகன் பற்றி.

அன்றிலிருந்து ஒவ்வொரு நாள் இரவும் சிவாவிற்கு சாம்பராணி இல்லாமல் சூடம் இல்லாமல் உறு ஏற்றப்பட்டது. ஒவ்வொரு ஆணுக்கும் வாய்க்கும் மனைவியைப் பொருத்து இரவுகள் பலமானதாகவும் பலவீனமாகவும் விடிகிறது. ஒருவன் மணம் செய்து கொள்ள ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் போதும், அதே நேரம் அந்தப் பெண் குலமகளாய் அமைய கொடுத்து வைத்திருக்க வேண்டும் என தெரியாமல் சொல்லவில்லை. அரவிந்தனுக்கு போல் நல்ல மனைவி அமைய சிவா கொடுத்து வைக்கவில்லை என்று தெளிவாகத் தெரிந்தது. அடுத்த ஒரு மாதத்திலேயே அலுவலகத்தின் பக்கத்தில் வீடு பார்க்கப்பட்டது. அவர்கள் கிளம்பிச் செல்வதை மூவரும் சலனம் இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர, ஏன் போகிறீர்கள் என்று கேட்கவில்லை.

''அப்பா! நான் படிக்கலைப்பா, மாசம் இருநூறு முன்னூறு செலவாகுது. நீங்க கஷ்டப்பட வேண்டாம். குருவி சேர்க்கிற மாதிரி பெரியண்ணன் வரும்போது கொடுத்த பணத்தை எல்லாம் சேர்த்து வச்சிருக்கேன். ஆயிரத்து இருநூத்தி எட்டு ரூபாய் இருக்கு, அதை வச்சி ஒரு பழைய தையல் மிஷின் வாங்கித் தாங்கப்பா... ப்ளீஸ்ப்பா... மாட்டேன்னு மட்டும் சொல்லிடாதீங்க'' பாரதி கேவினாள்.



அடுத்த ஒரு வாரத்தில் பெற்றவர்களின் விருப்பம் இல்லாமல் படிப்பை நிறுத்தி, தையல் மிஷின் வாங்கினாள். மிஷின் வந்த அன்றில் இருந்தே டகடகடக.. டக.. டக.. என்ற ஓசை தீவிரமாக அந்த வீட்டில் இருந்து எதிரொலிக்க ஆரம்பித்தது.



# 5

கோவை. காலை 10.00 மணி. மந்தமான வெயில். சென்னையில் 6.00 மணி போன்ற சூழல்.. மிதமான குளிர். அனுபவிக்க வேண்டிய சீதோஷ்ணம். ஆரவாரம் அடங்கிய அந்த ஏரியாவில் ஒன்பதாவது சந்தில், வெளிர் பச்சை நிற கான்க்ரீட் வீட்டின் முன் நம்பரையும், கையில் இருந்த முக வரியையும் சரி பார்த்து காலிங் பெல்லில் கை வைத்தாள் அந்த இளம்பெண். உள்ளே கிளி கொஞ்சியது. இரண்டு நிமிட தாமதத்திற்குப் பிறகு கதவைத் திறந்த ராதா ஸ்தம்பித்தாள். இரண்டு மூன்று முறை கண்களை முடித்திறந்தவள், சந்தேகம் விலகாமல் தன்னையே கிள்ளிப் பார்த்து...

''மீரா... நீயா?'' சின்னக் குழந்தையின் உற்சாகத்தோடு கால் எம்பிக் குதித்து, தன் நாத்தியின் கை பிடித்து உள்ளே இழுத்தவள்; கதவை சாத்தி தாழிட்டு அவளோடு சோபாவில் சரிந்து உட்கார்ந்தாள்.

''என்னால நம்பவே முடியல, உன்னோட அண்ணன் வீட்டிற்கு இப்போதுதான் வரணும்னு தோணிச்சா.. அம்மா, அப்பா எப்படி இருக்காங்க? பாரதி நல்லா இருக்காளா? சுமதி அரியர்ஸ் எல்லாம் முடிச்சிட்டாளா? சிவா அப்புறம் வீட்டிற்கு வரவே இல்லையா? என்ன சாப்டற?'' அவள் பாட்டிற்கு கேட்டுக் கொண்டே போனாள். தலையைக் குனிந்தபடி



அண்ணியின் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள் மீரா. இல்லாத அழுக்கை நகக் கண்களில் இருந்து விடாப்பிடியாக எடுக்க முற்பட்டாள். மீராவின் கைகள் மேல் வைத்திருந்த ராதாவின் கைகளில் சூடாக இரண்டு துளி கண்ணீர் பட்டென விழுந்தன. பதறிப்போன ராதா... மீராவின் முகத்தை தன் முகத்திற்கு நேராகத் தூக்கினாள். மீராவின் விழிகளில் கண்ணீர் தளும்பியும் வழிந்து கொண்டும் இருந்தது. அவள் கண்கள் இளம் சூரியன் நிறத்தையும் அள்ளிப் பூசியிருந்தது.

''மீரா... மீரா... என்ன.. என்னம்மா?''

''அண்...ணி...''

''இம்.. சொல்லு.. நீ அழுது நான் பார்த்ததில்லையே... என்னால தாங்க முடியல மீரா... சொல்லு... உன்னோட அண்ணிகிட்ட சொல்ல உனக்கென்ன தயக்கம்?''

''என்ன மன்னிச்சிடுங்க.''

''என்ன தப்பு பண்ணின.. இம்'' சொல்லியபடி அவள் தலையை அன்போடு கலைத்து விட்டாள்.

''மன்னிச்சிடுங்க.''

''உங்கண்ணனுக்கு போன் பண்ணட்டா?'' வேகமாகத் தலையாட்டி மறுத்தாள் மீரா.

''ச்சே.. நான் ஒரு மடச்சி.. காலையில சாப்ட்டியா? வா சப்பாத்தியும் குருமாவும் இருக்கு... சாப்பிடு அப்புறம் பேசலாம்.''

முகம் கைகால் கழுவி. கொஞ்சம் தலைவலி தைலம் போட்டு கொதிக்கும் நீரில் குளிக்க வைத்து.. அவள் சாப்பிட்டு முடிக்கும்வரை காத்திருந்தாள் ராதா.



''சொல்லு... என்ன?''

''யார்கிட்டயாவது மனசவிட்டு கொட்டி.. ஒன்னு அழணும்போல இருக்கு.''

''அழற அளவிற்கு என்ன நடந்துச்சி?''

நிமிர்ந்து ராதாவைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

''என்னை அண்ணீன்னு ஒரு டிஸ்டென்சுல வச்சு பாக்காத.. உங்ககூடப் பொறந்தவளா நெனைச்சிக்கோ... என்ன விஷயமாக இருந்தாலும் எங்கிட்ட சொல்லு.''

''அம்மா அப்பாவை அரவிந்த் தன்னோட பங்குக்குக் கொஞ்சம் கொன்னுட்டான். சிவாவும் ஜானகி முந்தானையில ஒளிஞ்சிகிட்டு உயிரோட சித்ரவதை பண்ணிட்டான். இப்போ என்னோட பங்கு.''

''என்ன மீரா சொல்ற?''

''நாளைக்கு நான் பீகார் போறேன்.''

''பீகார் எதுக்கு?''

''செட்டில் ஆகப் போறேன்.''

''புரியலையே'' கொஞ்சம் கலவரமாகக் கேட்டாள்.

''நாளைக்கு எனக்கு கல்யாணம், நாளைக்கு மறுநாள் தாமசோட பீகார் போறேன்'' சொல்லி முடிக்கும் முன் அவள் பொறி கலங்கும் அளவிற்கு 'பொளேர்' என அறை விழுந்தது. சிறிது நேரம் வெளிச்சம் பார்க்க முடியாமல் கண்களில் பூச்சி பறந்தது.

''பொய்கூட இப்படிப் பேசின வெட்டிடுவேன்.''

''உண்மை.''

''வெக்கமா இல்லை. இப்படி ஒரு அவமானத்தை நீ கொடுக்கறதைவிட அத்தையையும் மாமாவையும் கொன்னுடு.. எங்களால உனக்கு மாப்பிள்ளை பார்க்க எடுபடல நீயே

பார்த்துக்கோன்னு சொல்விட்டோமா? குண்டு மாதிரி எல்லோரும்தானே இருக்கோம். என்னடி ஆச்சி உனக்கு?'' ஆத்திரம் தீர வார்த்தைகளைக் கொட்டினாள். பட்டாசு கணக்காக வெடிக்கும் ராதாவைத் துளிகூட பயம் இல்லாமல் பார்த்தாள் மீரா.

''நீங்க அடிச்சாலும் சரி. திட்டினாலும் சரி. உங்க மடியில படுத்துக் கதறணும்னுதான் நான் இங்கே வந்தேன்.''

எச்சிலை விழுங்கிக் கொண்டு, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட ராதா சோபாவில் உட்கார்ந்தாள்... இமைகள் முடிச்சிட..,

''நீயே மாப்ள பாத்துட்ட, நாளைக்கு கல்யாணம், அடுத்த நாள் பீகார்ல செட்டில், எல்லாம் முடிவு பண்ணிட்டு என்னை எதுக்காகப் பார்க்க வந்த?... சாட்சி கையெழுத்துப் போடணுமா?'' வாழப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் வார்த்தைகளால் குத்தினாள்.

ராதாவிற்கு அருகில் உட்காராமல், ராதாவின் கால் அடியில் மண்டியிட்டு அமர்ந்தாள் மீரா. கண்ணீரைப் புறங்கையால் துடைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தாள்.

''அப்பாவோட கௌரவத்துக்கு முன்னால எனக்கு எல்லாமே தூசு அண்ணி. யாரையாவது காதலிச்சி கல்யாணம் பண்ணிகிட்டு குடும்பப் பேரைக் கெடுக்கணும். நான் மட்டும் சந்தோசமா இருக்கணும், அப்படின்னு ஒரு நிமிஷம் கூட நான் நினைச்சதில்லை. ராஜா, ராணி மாதிரி வாழ்ந்தவங்க. இப்ப எப்படி இருக்காங்கன்னு உங்களுக்கே தெரியும். இதுல நாங்க காலேஜ் வேற போறோம். சிவாவும் பணம் தரத நிப்பாட்டிட்டான். அரவிந்த் பத்தி உங்களுக்கே தெரியும். பத்து நாளைக்கு முன்னால ஊருக்குப் போனேன். ஒரு மணி நேரம் கூட என்னால அங்க இருக்க முடியல. பாரதி தையல் தச்சு சோறு போட்டுக்கிட்டு இருக்கா. பாரதி எடுத்து வளர்த்த



புள்ள அண்ணி, அவளுக்கு இருக்கிற அக்கறை, எங்க யாருக்குமே இல்லன்னுதான் சொல்லணும். அப்பா சொன்னார் என்னைப் பொண்ணு பார்க்க வந்திருக்காங்களாம். வெங்காயம் கறுவேப்பிலைன்னு அவங்க கேட்ட சீர்வரிசை கணக்குப் போட்டு பார்த்தா. ஒரு லட்சத்தைத் தாண்டுது. எனக்கு வேண்டான்னா, குடும்ப கௌரவம் ஒண்ணு இருக்கே. உன்னை சும்மா அனுப்ப முடியுமா? பொண்ண எத்தனை நாளைக்கு வீட்டுலேயே வச்சிருக்க முடியும்னு டயலாக் பேசறார். எப்படிப் பண்ணப் போறீங்கன்னு கேட்டதற்கு.. வீட்ட விக்கப் போறாங்களாம். வீட்டை வித்துட்டா அவங்க நிலை. சுமதி, பாரதியோட கதி. என்னால அவங்களுக்கு உதவி பண்ண முடியாட்டியும் கஷ்டத்தைக் குடுக்க விரும்பலண்ணி. இத்தனை நாள் பார்த்துப் பார்த்து பரிதாபப்பட்ட தாமஸையே கல்யாணம் பண்ணிக்கறதுன்னு முடிவு பண்ணிட்டேன். அம்மா அப்பாகிட்டே சொல்ற தைரியம் இல்ல. பீகார் போன உடனே லெட்டர் போடப்போறேன். திரும்ப நான் இங்கே வரப் போறதில்ல... ஏன்னா, ஆம்பளை இந்தத் தப்பை பண்ணினா.. அப்படியான்னு கேட்டுட்டுப் போயிடுவாங்க. ஆனா அதுவே என்னை மாதிரி பொம்பளையா இருந்தா உடம்பு திமிரு.. கொழுப்பு, எவனையோ இழுத்துகிட்டு ஓடிட்டாம் பாங்க. அதக்கேட்டு எங்கப்பா அம்மா உயிரோட இருக்க மாட்டாங்கண்ணி. அது கிராமம். ஒன்னுண்ணா ஊரே தெரிஞ்சிடும். அதனால வேலை விஷயமா வெளிநாடு போய்ட்டேன். நம்ம குடும்பத்தைப் பொருத்தவரை உயிரோட செத்துட்டேன்.''

''...........''

''இது நான் நல்லா யோசிச்சு எடுத்த முடிவு. இதுல எந்த மாற்றமும் இல்லை. நீங்க நினைக்கலாம். இதுக்கு இதுதான் தீர்வான்னு. எனக்குத் தோணுனது இதுதான். இதைவிட நல்லவழி எனக்குத் தெரியல. இரண்டு நாளைக்கு முன்னமே காலேஜில் இருந்து டிஸ்கண்டினியூ பண்ணிட்டேன். பீகார்



போனதும் படிச்ச படிப்புக்கு ஒரு ரிசப்ஷனிஸ்ட் வேலையாவது தேடிக்குவேன். என்னோட சம்பளத்துல பாதி உங்களுக்கு அனுப்புறேன். அதை நீங்க அனுப்புறதா அம்மாவிற்கு அனுப்பிடுங்க. ஏன்னா ஓடிப்போனவ காசை அவங்க தொட மாட்டாங்க.''

ஆத்திரமும் அழுகையுமாய்ப் பேசிக் கொண்டிருந்த மீராவை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த ராதா,

''உங்க அண்ணன் உனக்கு எதுவுமே செய்ய மாட்டார்ன்னு நீயே முடிவு பண்ணிட்டியா?''

''என்னைப் பொருத்தவரைக்கும் அவன் என்னைக்கோ செத்தாச்சி. பெத்தவளுக்கே சோறு போட யோசிக்கிறான். எனக்கு செய்வாங்கறீங்களா? நான் மட்டும் இல்லை, இன்னும் ரெண்டு பேரும் இருக்காளுங்க.''

''..............''

''உங்க மனசத் தொட்டுச் சொல்லுங்க... என்னோட படிப்பு பத்தி என்னோட வாழ்க்கை பத்தி உங்ககிட்ட பேசி இருக்கானா? அதைப் பத்தி பேசனா நமக்குள்ளகூடக் கஷ்டம் வரும். உங்க மனசப்பத்தி எனக்குத் தெரியும். அம்மாகிட்டகூட சொல்லணும்னு தோணலை. உங்ககிட்ட சொல்லணும்னு தோணிச்சி.''

சோபாவில் இருந்து கீழே இறங்கி மீராவைத் தன் மடியில் சரித்துக் கொண்ட ராதா.. அவள் முதுகு தடவி தன் ஆதரவைச் சொன்னாள்.

''நான் ஊருக்கு வரேன்., அத்தை மாமாகிட்டே சொல்லி நல்லபடியா நடத்தி வைக்கிறேன்.''

''நடக்காது... சம்மதிக்க மாட்டாங்க.''

''நீ எங்க வீட்டுப் பொண்ணு, நீ நல்லா, சந்தோசமா வாழணும்.''

''நான் போயிட்டு வரேண்ணி.''



''மீரா!''

''சொல்லிவிட்டுப் போகத்தான் வந்தேன்.''

தன் கழுத்தில் கிடந்த செயின், கைகளில் இருந்த வளையல்களை உருவி மீராவிடம் கொடுத்தாள்.

''இது உன் அண்ணியோட சீதனம். உனக்கு என்னென்ன வேணும்னு சொல்லு. எங்கப்பாகிட்டே சொல்லி ஏற்பாடு பண்றேன்'' என்றாள்.

''இந்தப் பாசம் மட்டும் போதும்'' வேதனையாகச் சிரித்தாள் மீரா.

''இந்தாங்க...'' அவள் கொடுத்த பொருட்களை அவளிடமே கொடுத்தாள்.

''மீரா!''

''நான் அனுப்புற பணத்தை மட்டும் அம்மாவிற்கு, நீங்க அனுப்புறதா அனுப்பிடுங்க. அண்ணி எனக்கு ஒண்ணு வேணும்.''

''தாராளமா.. உனக்கு என்ன வேணும்?''

''நீங்க யூஸ் பண்ணிகிட்டு இருக்க ஒரு சேலை மட்டும் போதும்.''

''சேலையா? யூஸ் பண்ணினதா?''

''ஆமாம்! உங்க ஞாபகம் அதிகமாயிட்டா, அந்தச் சேலையை எடுத்துக் கட்டிப்பேன். அப்போ நீங்களே என்னைச் சுத்தி இருக்கற மாதிரி ஒரு சந்தோசம்.''

மீராவின் பாசத்தில் ஆடிப்போன ராதா பீரோவில் இருக்கும் அத்தனை சேலைகளையும் கொட்டிக் கவிழ்த்தாள். ஒரே ஒரு வெளிர்ப்பச்சை புடவையை எடுத்துக் கொண்டு மீரா போய் வெகு நேரம் ஆகிவிட்டது. அவள் பார்வை அவள் அன்பு. அவள் விட்டுச் சென்ற கண்ணீர் எல்லாம் அந்த கூடத்தையே சுத்திச் சுத்தி வந்தது. மீரா எடுத்த முடிவு சரியா?

தவறா? என்றும் தெரியவில்லை. தவறு என்றும் தோன்றுகிறது. தவறு இல்லை என்றும் படுகின்றது. கண்ணீர் குண்டு விழுந்த கணக்காக எதுவும் புரியவில்லை. புலப்படவில்லை. கண்கள் இருட்டிக் கொண்டு வந்தது ராதாவிற்கு... அப்படியே ஹாலில் இறைந்து கிடந்த புடவைகள் மேல் படுத்துக்கொண்டு கதற ஆரம்பித்தாள். அந்தக் கதறலை யாரும் கேட்கப் போவது இல்லை என்பது உண்மைதான்.

**கா**லை ஆறு மணிக்கு வாயில் வைத்த வேப்பங்குச்சியை 11.00 மணி வரைக்கும் கடித்துக் கொண்டு இருந்தார் செல்வ நாயகன். ''ஐயா!'' போஸ்ட்மேன் பவ்யமாக நின்று கொண்டிருந் தான்.

''என்ன தம்பி'' நாக்கை வழித்து வேப்பங்குச்சியைத் தூக்கி எறிந்தார்.

''தபால்!'' கொடுத்துவிட்டு நகர்ந்தான்.

''மீராவா!'' முணுமுணுத்துக்கொண்டே ஆர்வமாகக் கடிதத்தைப் பிரித்தார். ஒவ்வொரு வரியிலும் பார்வைகள் பரவிப் பரவி மாறின. கடிதத்தை முடிக்கும்போது முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் இறுகிப்போய்.. கடிதத்தைக் கிழித்தார். அதீத துக்கம்.. மௌனத்தை பரிசாகக் கொடுத்தது.

''பாரதீ.. ஈ... ஈ...''

ஓடிக் கொண்டிருந்த தையல் மெசின் சட்டென நிறுத்தப்பட்டது.

''என்னப்பா?'' மிசின் விட்டு எழுந்தாள்.

''கொஞ்சம் தண்ணி எடுத்து வைக்கிறியா, தலை முழுகணும்.''

''என்னப்பா... சொல்றீங்க... நேத்துல இருந்து காய்ச்சல் குறையவே இல்லை.''

''குளிச்சிதான் ஆகணும், தங்கச் சங்கிலிக்கு முன்னால உங்க கௌரவம்தான் பெருசுன்னு பேசுனவ... அவள் காதலுக்கு முன்னால என்னோட கௌரவம் கால் தூசுன்னு



போயிட்டாம்மா... போச்சி... எல்லாம் போச்சி, தருதல பசங்கதான் போயிட்டாங்கன்னு நினைச்சேன். பொண்ணும் போயிட்டாம்மா... நான் நம்பிய பொண்ணும் போயிட் டாம்மா... பாரதி... அம்மாடி... சின்னத்தாயி. உன்னை நம்பித்தான் இந்த உசுரு இருக்கும். நீயும் நெஞ்சுல குத்திடாதம்மா. இந்தக் கிழவன் தாங்க மாட்டான்.''

கையைப் பிடித்துக் கொண்டு கதறும் தந்தையை.. பயத் தோடு பார்த்தாள் பாரதி.



# 6

**ந**டுநிசி.

இரவு 12.00 மணி இருக்கும். பகல் போன்ற நிலவொளி. தன் வீட்டு மொட்டை மாடியில் வெறும் துண்டை மட்டும் விரித்து, வானத்தைக் கண்களால் அளந்து கொண்டு இருந் தார் செல்வவிநாயகம். கட்டவிழ்ந்து ஓடும் அவர் எண்ண ஓட்டத்தை யாரோ நடந்து வரும் மெல்லிய பாத அசைவுகள் அதிராத அந்த நடை தடுத்து நிறுத்தியது.

இந்த நேரத்தில் யார்?

சாரதாவின் ஒடிசல் உருவம் தெரிந்தது. கொட்டும் பனியில், இப்போது இடிக்கட்டுமா... அப்புறம் இடிக்கட்டுமா என்று திடீர் என்று கருமையோடு சூழ்ந்துகொண்ட மேகங்களுக்கு மத்தியில் இத்தனை இருமலோடு இவள் ஏன் மேலே வருகின்றாள்? காரணத்தோடு சாரதா மேல் கோபம் வந்தது.

''இந்த இருட்டுல, பனியில, எதுக்கு மேலே வர?''

இருமலோடு வார்த்தைகளையும் இருமினாள் சாரதா. தெளிவாக ஒன்றும் புரியவில்லை.



''பனியில நனையாத, இருமல் அதிகமாகும். வரட்டு இருமல் நெஞ்சை வலிக்கும்'' சொல்லிக்கொண்டே எழுந்து உட்கார்ந்தார்.

''பாரதி நீ இல்லன்னதும் எந்திரிச்சிடப் போறா?''

''நல்லா தூங்கறா. இன்னும் ரெண்டு நாளையில அம்மன் திருவிழா இல்லையா. நாள் முழுக்க துணிய தைச்சி புள்ளை களைச்சிப் போய்ட்டா.. அடிச்சிப் போட்டா மாதிரி தூங்குது.''

''கால் வலிக்குதுன்னு சொன்னாளே, இப்ப எப்படி இருக்கு?''

''தூங்கின பின்னால தைலம் தேச்சி விட்டு இருக்கேன். கீழே வாங்க'' தலையை அசைத்துக் கொண்டு மெதுவாக எழுந்தார். நிதானமாக ஒவ்வொரு படியிலேயும் கால் வைத்து இறங்கினார். பாரதி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். சீரான சுவாசத்தால் அவள் மார்பு ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. உதடு இரண்டும் பிளவுபட்டு, உள்ளிருந்த மேல் பற்களில் இரண்டு, வெண்மையாக கீற்றாகத் தெரிந்தன. பாவாடை கணுக்காலுக்குக் கொஞ்சம் மேலே ஏறியிருந்தது. தாவணி விலகாமல் இருக்க, தலையணையை இறுக்கமாக அணைத்துக் கொண்டு படுத்திருந்தாள். சிறிது நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''தூங்கற புள்ளையப் பார்க்காதீங்க ஆயிசு கம்மியாயிடும்'' அதட்டினாள் சாரதா.

''நம்ம மாதிரி கிழவன் கிழவியாகி சின்னப்படணுங் கறியா?''

''என்ன நாம சின்னப்பட்டுட்டோம்?''

''பட்றது வேதனையா தெரியலையா?''

''பாரதி இருக்காங்க.. ராதான்னு தங்கமான மருமக இருக்கா.. இந்த உறவு போதுங்க..''

''ஏன் இப்படி மாறிட்டாங்க?'' அவர் வார்த்தைகளில் வேதனையைவிட வினாதான் தொக்கி நின்றது.



''நம்ம வீட்டு மொட்டை மாடியில, நம்ம குழந்தைங் களுக்குச் சோறு ஊட்டி, ராமாயணம் மகாபாரதம், கர்ணன், கண்ணன், சூரியன், சந்திரன்னு விதவிதமான கதையா சொன் னோம். ஆனா.. கண்ணு தெரியாத பெத்தவங்களை தோள்ல சுமந்துகிட்டு காடு மலையெல்லாம் நடந்த சிரவணனோட கதையை நாம சொல்ல மறந்திட்டோம். குஞ்சுக்கு றெக்கை முளைத்தால் பறக்கத்தான் துடிக்கும். தாய்ப் பறவையோட இருக்காது. இறக்கை வளர்ந்த குஞ்சு.. கூட்டுக்குள்ளேயே இருக்கணும்னு நினைக்கிறதும் தப்பு. இருக்கிறதும் தப்பு.. விடுங்க.. நடக்கறது நடக்கட்டும். ஆமாம், காலையில ராம சாமி வந்த மாதிரி இருந்ததே எதுக்கு?''

''இந்த வீட்டை விக்கப் போறேன்.''

''எவ்வளவிற்கு?''

''ஒன்றரை லட்சத்திற்கு.''

''குடுக்கப் போறீங்களா?''

''ஆமாம். அடுத்த தெருவிலேயே இருபது ஆயிரத்திற்கு ஒரு குடிசை பாத்து இருக்கேன்.''

''எதுக்கு இந்த ஏற்பாடு?''

''பெரியவ செத்த மாதிரி, இருக்கறவளும் சாகக் கூடாது பாரு.''

''.........''

''நல்ல வரன் ஒன்று வந்திருக்கு. அதிகமா எதிர்பார்க்காத குடும்பம்.. இந்தப் பணத்தில சுமதியை அனுப்பிடணும்.''

**சு**மதி - சரவணன் திருமணம் கோலாகலமாக நடந்தது. சிவாவையும் அரவிந்தனையும் விருந்தினர் போல் பத்திரிகை வைத்து அழைத்தார். ஜானகி எதையும் கண்டு கொள்ள வில்லை. வந்தாள், திருமணத்தைப் பார்த்தாள், சாப்பிட்டாள், கிளம்பி விட்டாள். ஆனால் ராதாவை மட்டும் பதினைந்து

நாட்களுக்கு முன்பே வீட்டுக்கு அழைத்து வந்தார். அவள் தலையசைத்தால் தான் ஒவ்வொரு காரியமும் ஓ.கே. ஆனது. மீரா எங்கே? என்று எழுந்த கேள்வியை, அவள் வெளிநாடு சென்றிருக்கின்றாள் என்று ராதாதான் அமுக்கி வைத்தாள்.

எல்லா அமளியும் முடிந்தது. அடுத்த இருபத்தி ஏழாவது நாள் வீட்டை வாங்கியவனுக்கு காலி செய்து கொடுத்து, தங்கைகளுக்காக வாங்கப்பட்ட குடிசைக்கு மூவரும் குடி பெயர்ந்தார்கள். காலம், தன் வேகத்தைக் கூட்டவோ குறைக்கவோ இல்லை. நிமிடமாக மணியாக, நாளாக, வாரமாக, மாதமாக உருண்டோடியது. ஐந்து மாதங்கள் முடியும் தருவாயில் சாரதாவின் இருமல் தன் வீரியத்தைக் காட்டத் துவங்கியது. ஏற்கனவே எலும்புக் கூட்டில் தோலை ஒட்ட வைத்தாற் போல் உடம்பு மெலிந்திருந்தது. இப்போது மிகவும் மோசம். இருமக்கூட சக்தி இல்லாமல் உடல் குலுங்கியது. பக்கத்து டவுனில் உள்ள ஹாஸ்பிடலுக்கு வாரம் இரண்டு முறை போக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அது பெரிய இடத்து ஹாஸ்பிடல் என்பதால், இனிமேல் இவளைக் காப்பாற்ற எதை விற்பது? என்று நெற்றியில் கோடுகள் விழுந்தன செல்வ விநாயகத்திற்கு...

அந்த மாத சீட்டுக்காரன் வீட்டுக் கதவைத் தட்டும் போதுதான், பாரதிக்கு எல்லாம் தெரிந்தது. தன் நலனுக்காக தன் தாய் சீட்டுக்கட்டிக் கொண்டிருப்பது. உடல் முடியெல்லாம் சிலிர்த்து நின்றது. இவர்கள் மனிதர்களா? இல்லை தெய்வமா? முதலில் சீட்டுப் பணத்தை எடுத்து அம்மாவிற்கு வைத்தியம் பார்க்கணும். திடமான முடிவுக்கு வந்தாள். அன்று புதன்கிழமை, ஹாஸ்பிடலுக்கு சாரதாவை அழைத்துப் போகும் நாள்.

ரவிக்குமார் நர்ஸிங்ஹோம். டாம்பீகமாக உயரமான கட்டிடங்களோடு பளபளத்துக் கொண்டிருந்தது. மாருதி, காண்டஸா, பிரிமியர், டாடா சியாரா என்று கார்களின் வரிசையி



லேயே, ஹாஸ்பிடலின் தரம் தெளிவாக, ஆடம்பரத்தோடு தெரியும். கன்ஸல்ட்டிங் பீஸே இருநூறுக்கும் மேல் வெட்டப்பட வேண்டிய டாக்டர்கள். செல்வவிநாயகம் எவ்வளவோ தடுத்தும் பாரதிதான் கேட்கவில்லை. தன் அம்மாவை அந்த ஹாஸ்பிடலில் தான் பார்க்க வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தாள். அழைத்துக் கொண்டு வந்து, விசிட்டர்ஸ் ஹாலில் உட்கார்ந்து இருக்கின்றாள். டெட்டால் வாசமும், மருந்து நெடியும், கலந்து என்னவோ போல் இருந்தது. அமைதி.. படுசுத்தம். போன் மணியின் சத்தத்தைத் தவிர.. நர்சுகளின் பூட்ஸ் சத்தத்தை தவிர.. வேறு எதுவும் கேட்க வாய்ப்பில்லாத அமைதி.

''டோக்கன் நம்பர் நைன்... மிஸ்ஸஸ். சாரதா'' நர்ஸின் குரல் கேட்டதும், சாரதாவைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு பாரதி எழுந்தாள்.

''ரைட்ல மூணாவது ரூமிற்குப் போங்க'' நர்ஸின் கட்டளையை வாங்கிக் கொண்டு, அவள் சொன்ன அறைக்குள் தாயோடு நுழைந்தாள். ''நீ கொஞ்சம் வெளியே இரும்மா'' லேடி டாக்டரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு தயக்கமாக அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வரவும், வேகமாக அந்த இளைஞன் உள்ளே வரவும் சரியாக இருந்ததால், பலமாக இடித்துக் கொண்டார்கள். கீழே விழப் போனவளை தாங்கிப் பிடித்துக் கொண்டான் அவன். நல்ல சிவந்த நிறம். சுருள் சுருளான முடிகள். விளம்பரத்திற்குப் போக வேண்டிய அழகான முகம். அவனும் டாக்டர் என்பதற்கான வெள்ளை நிறக் கோட். கண்களில் அவன் முகத்துக்கு ஏற்றாற்போல் அழகு கொடுக்கும் ஸ்பெக்ஸ். மெத்தென தன் மேல் மோதிய பூவை விலக்க மனம் இல்லாமல், கள்ளமில்லாத கிராமத்து அழகைக் கண்களால் பருக ஆரம்பித்தான். கல்லூரி வாழ்க்கையிலோ, இந்த ஹாஸ்பிடலிலோ இதுவரை இப்படி ஒரு அடக்கமான அழகைப் பார்த்திருக்கின்றோமா? அவன்



யோசித்துக் கொண்டிருக்கும்போதே.. நிதானித்து அந்நிய ஆடவன் கைகளில் சிக்கி இருக்கின்றோம் என்று சடார் என விலகினாள் பாரதி.

''ஸாரி'' தோளை குலுக்கிக் கொண்டு சிரித்தான்.

''பரவாயில்லை ஸார்'' நகர்ந்து கொண்டாள்.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே போக கை வைத்தான், திரும்பிப் பாரதியைப் பார்த்து,

''எக்ஸ்க்யூஸ்மி'' என்றான். திரும்பிப் பார்த்தாள் பாரதி.

''அம்மாவிற்கு உடம்பு சரியில்லை.''

''அம்மா பேர் என்ன?''

''சாரதா.''

''ம்'' யோசித்தவன். ''அடிக்கடி வருவீங்கள்ல?''

பாரதி புருவத்தை உயர்த்திப் பார்த்தாள்.

''சும்மா கேட்டேன். யுவர் குட் நேம் ப்ளீஸ்?''

''பாரதி.''

''ஐ'ம் மனோஜ். டாக்டர் மனோஜ்..'' கண்களைச் சிமிட்டியபடியே உள்ளே நுழைந்து கொண்டான். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு பாரதி உள்ளே அழைக்கப்பட்டாள். சாரதாவை வெளியே உட்கார வைத்துவிட்டு, பவ்யமாக லேடி டாக்டர் எதிரில் உட்கார்ந்தாள். அந்த டாக்டருக்கு அருகிலேயே மனோஜும் அமர்ந்திருந்தான். முன்பிருந்த கலகலப்போ, துள்ளலோ இல்லை, சீரியஸாக இருந்தான்.

''மிஸ். பாரதி, நான் சொல்லப் போறதை கொஞ்சம் கவனமா கேளுங்க பயப்படக்கூடாது'' என்று பயம் காட்டினான்.

''அம்மாவிற்கு ஒன்றுமில்லையே டாக்டர்'' குரலில் அழுகை கலந்தது.



பாரதி அழக்கூடாது எனத் தேவையில்லாமல் பயந்தான் மனோஜ்.

''நீங்க மட்டும் தான் மகளா?''

''இல்ல, இன்னும் நாலு பேர் இருக்காங்க.''

''ஐந்து கொழந்தைங்களா? மத்தவங்கள்லாம் எங்கே? ரெண்டு குழந்தைன்னாலே உடம்பு போயிடும். ஐந்து குழந்தையா? அதான் கர்ப்பப்பை ஆட்டம் கண்டுடுச்சி.. இவ்வளவு மோசமான நிலையில் கூட்டிகிட்டு வந்து இருக்கீங்களே... ஏதாவது ஒண்ணுன்னா.. டாக்டர்ஸ் மேல பழியத் தூக்கிப் போடவா?'' கோபமாகப் பேசினாள்.

''டாக்டர் அம்மாவிற்கு.''

''கர்ப்பப்பையில் கேன்ஸர். அது மட்டும் இல்ல, டி.பி.''

''டாக்டர்.''

''உஷ். அழக்கூடாது. உடனே உங்கம்மாவை அட்மிட் பண்ணனும். ஆப்ரேஷனுக்கும் ரெடி பண்ணனும். உடனே யூட்ரஸ்ஸை ரிமூவ் பண்ணிட்டா இப்போதைக்குப் பிரச்சினை இல்லை.''

''எவ்வளவு செலவாகும்.''

''ஆபரேஷனை ஏத்துக்கற அளவு உங்கம்மா உடம்புல சக்தி இல்லை. டென்டேஸ் பெட்ல இருந்து, கம்ப்ளீட்டா ரெஸ்ட் எடுத்து, ட்ரிப்ஸ் ஏறி, மெடிசன்ஸ் அப்ளை பண்ணி, அப்புறமா ஆபரேஷன் பண்றதுதான் நல்லது. தற்போது டென் ஆர் ட்டுவல் தவுசன்ஸ் வச்சிக்கோங்க. அது மட்டும் இல்லை. டோட்டலா டோன்டிக்கு மேலேயே போகும்... முதல்ல உங்கம்மாவ அட்மிட் பண்ணிட்டு... நாளைக்கு வந்து பணத்தக் கட்டிடுங்க...''

''எவ்வளவு?''

''முதல்ல ஒரு பனிரெண்டாயிரம் கட்டச் சொல்வாங்க...?''

சொல்லிவிட்டு அந்த லேடி டாக்டர் வெளியேறியதும்,

''பாரதி'' மனோஜ் அழைத்தான்.

''யூ டோன்ட் ஒர்ரி. நாளைக்கு ட்வல் தவுசண்ட் கட்ட முடியுமா?''

''ம்.'' தலையாட்டினாள்.

''நீங்க ஊருக்குப் போயி உங்கப்பா கிட்ட சொல்லி பணத்தை ஏற்பாடு பண்ணுங்க. நான் உங்கம்மாவ இங்கே பார்த்துக்கிறேன். உங்க அம்மாவிற்குத் தெரிய வேண்டாம்'' எச்சரித்துவிட்டு நகர்ந்தான். அடுத்த அரை மணி நேரத்தில் சாரதா அட்மிட் செய்யப்பட்டாள். எதற்கு என்று சாரதா கேட்டதற்கு, தெம்பிற்காக க்ளுகோஸ் ஏத்துறோம் என்று மனோஜ் கூறி வைத்தான்.

ஆடிப்போய் உட்கார்ந்திருந்தார் செல்வவிநாயகம்.

''என்னப்பா... நீங்களே இப்படி இடிஞ்சி போயிட்டா, அம்மாவிற்கு யார் ஆறுதல் சொல்றது.. அம்மாவ நாம இழந்திடக் கூடாதுப்பா... அண்ணனுக்கோ, அண்ணிக்கோ லெட்டர் போட நேரம் இல்லை. வரும்போதே சீட்டுக்காரனைப் பார்த்தேன். பதினைந்தாயிரத்துக்கு அம்மா கட்டிய சீட்டை, பத்தாயிரத்துக்கு தான் இப்போ எடுக்க முடியுமாம். எடுத்துக்கிறேன்னு சொல்லிட்டேன். இன்னும் இரண்டாயிரத்துக்கு மட்டும் இப்போ புரட்டணும்பா.. மத்ததை அப்புறமா பார்த்துக்கலாம்.''

''என்ன என்னம்மா பண்ணச் சொல்ற. இந்த ராத்திரி நேரத்துல எங்கடா போய்க் கேக்கறது?''

''ஏம்பா, சுமதியக்கா பக்கத்துலதானே இருக்கா?''

''பொண்ணு வீட்டுல போய் கேக்கச் சொல்றீயேம்மா.''

''இப்படி... கௌரவம், சட்டம், நீதின்னு பாத்துதான் இப்படி இருக்கோம்... பொண்ணுன்னு எட்டு மாசத்துலேயேயா பொறந்துட்டோம்... இல்லியேப்பா.''



''எனக்கென்னமோ மனசு எட்டலம்மா.''

''போங்கப்பா.''

பாரதியின் வார்த்தைக்காக அந்த இரவு நேரத்திலேயே பஸ் பிடித்து பயணப்பட்டார். சுமதியின் வீட்டை அடையும் போது மணி 9.30.

''வாங்கப்பா.. இந்த நேரத்துல'' சுமதிதான் கேட்டாள்.

''மாப்ள இல்லையாம்மா.''

''இல்லப்பா, இன்னும் கொஞ்ச நேரத்துல வந்திடுவார்.. சாப்பிடுங்கப்பா.''

''சாப்பிட்ற நிலைமையில் நான் இல்ல சுமதி.'' சுருக்கமாக எல்லாவற்றையும் கூறி, தான் வந்த விசயத்தையும் கூறினார்.

''அப்பா தப்பா எடுத்துக்காதீங்க.. மாசக் கடைசி.''

''பரவாயில்லம்மா.. நான் வரேன்.''

''அப்பா!''

''இல்லம்மா...'' சுமதியின் முதுகைத் தடவிக் கொடுத்தவர், அந்த துக்கத்திலும் ''மாப்பிள்ளை நல்லா வச்சிருக்காரா'' என்றார்.

''ம்'' தலையாட்டினாள்.

''சரி வரேம்மா.. பாரதி தனியா இருக்கும்'' யோசித்தபடியே வந்தார். எதிரிலேயே ஸ்கூட்டரில் சரவணன் எதிர்பட்டான். அவரைப் பார்த்ததுமே...

''மாமா!'' பைக்கை நிறுத்தினான்.

''நல்லா இருக்கீங்களா?''

''ம்.. என்னது இந்த ராத்திரியில.''

விவரத்தைச் சொன்னார்.

''சுமதி பணம் கொடுத்தாளா, வாங்கிட்டீங்களா, இன்னைக்கு மாலைதான் பட்டுப் புடவைக் கேட்டான்னு நாலாயிரம் ரூபாய் எடுத்துக்கிட்டு வந்து குடுத்தேன்.''



செல்வவிநாயகத்திற்கு கன்னத்தில் ஓங்கி அறை விழுந்ததுபோல் இருந்தது.

''என்னங்க மாமா, பணம் வாங்கிட்டீங்கல்ல?'' சந்தேகமாகக் கேட்டான்.

''வாங்கிகிட்டேம்பா.''

''முதல்ல போய் அத்தையைப் பாருங்க, நானும் லீவ் போட்டுட்டு சுமதியைக் கூட்டிகிட்டு வரேன்.''

அதற்கு எந்த பதிலும் சொல்லாமல் அவர் நடந்து போவதை, புரியாமல் பார்த்தான் சரவணன்.

## 7

**ஃபோ**ம் மெத்தையில் புரண்டு கொண்டு இருந்தான் மனோஜ். பாரதி கண்ணில் பட்ட நாட்களில் இருந்து, தூக்கம் காணாமல் போய் விட்டது. என்றைக்கு எம்.பி.பி.எஸ். ஃபர்ஸ்ட் இயரில் அடியெடுத்து வைத்தானோ அன்றில் இருந்தே பெண்கள் மேல் பரிதாபம், பாவ உணர்ச்சி இப்படித்தான் தோன்றியிருக்கிறது. முதல் முதலாக பாரதியைப் பார்த்ததும் ஏற்பட்ட.. ஷாக்.. கிளர்ச்சி.. சிலிர்ப்பு இதுவரை ஏற்பட்டதில்லை. ரோஜாக் குவியலாகத் தன் மேல் பாரதி சாய்ந்ததே.. ஃப்ளாஷ்பேக்காக மனத்திரையில் ஓடியது. கலங்கிய அந்தக் கண்கள். சின்ன இதழ் ப்ளோ-அப் விரிந்தது. அவளைத் தாங்கிப் பிடித்த தன் கைகளைத் தூக்கிப் பார்த்தான். தனக்குத் தானே சிரித்துக் கொண்டான். அவள் அம்மாவைக் காப்பாற்றி எப்படியாவது அவள் காதலைப் பெற வேண்டும். அவள் காதலிக்காவிட்டாலும் கூடப் பரவாயில்லை. பாட்டியை அனுப்பி பெண் கேட்டு, கல்யாணத்தில் தான் முடிக்க



வேண்டும். அந்த அப்பாவிப் பெண்ணின் உள்ளமும், உடலும் எனக்குச் சொந்தமாக வேண்டும். கனவோடும், பாரதியோடும் கட்டிலோடும் வெகுநேரம் போராடினான். இரண்டு நாட்களுக்கு முன் அட்மிஷனுக்கான இரண்டாயிரம் ரூபாய் இல்லாமல் அவளும், அவள் தந்தையும் கையைப் பிசைந்து கொண்டு நின்றபோது, இவனாகவே கேட்டு, தன் சொந்தப் பணத்தில் அதைக் கட்டியபோதே நன்றியோடு ஒரு பார்வை பார்த்தாளே அது போதும். அந்தப் பார்வை ஒன்றே போதும், தன் சொத்து சுகத்தை எல்லாம் விற்றுக் கொடுக்கும் அளவு சக்தி வாய்ந்ததாக இருந்தது. இவன் காதலால் கண் மூடாமல் இருந்தான். அங்கே பாரதி ஹாஸ்பிடலில் தாயின் தலைக்குப் பக்கத்தில் கவலையோடு கண் மூடாமல் இருந்தாள். அண்ணிக்கு அண்ணனுக்கெல்லாம் இன்று கடிதம் கிடைத்து இருக்குமா? தவிப்பாக இருந்தது. குழப்பம் நிமிடத்திற்கு நிமிடம் பல மடங்காக அதிகரித்தது.

காலை 9.00 மணிக்கெல்லாம், தனக்குத் தெரிந்த சமையலைச் செய்து எடுத்துக் கொண்டு, பாரதிக்குத் தேவையான தாவணி, பாவாடை எல்லாம் ஒரு ஒயர் கூடையில் எடுத்து வைத்துக் கொண்டு, வெளியே வந்தபோது, கண்ணாடி அணிந்த ஒரு இளைஞனைக் கை பிடித்து வந்தார் அவருடைய நண்பர் ராமசாமி.

''யாருப்பா... ஊருக்கு புதுசுபோல இருக்கு?''

''உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கார். கண்ணு தெரியாதாம், எப்படியோ பஸ் ஏறி, இங்கே வந்து இறங்கிட்டார். எங்கிட்டேதான் விசாரிச்சார். அதான் கையோடு கொண்டு வந்து விட்டுட்டேன்'' என்றபடி அந்த இளைஞனின் பக்கம் திரும்பி, 'தம்பி, நீங்க விசாரிச்ச செல்விநாயகம் இவருதாம்பா.. எனக்கு வேலை இருக்கு. அப்போ நான் உத்தரவு வாங்கிட்டுமா?'' அவர் நகர்ந்தார்.

செல்வவிநாயகம் யார் எனத் தெரியாமல் நெற்றியைச் சுருக்கினார்.

''ஸார் நான் உட்கார்லாமா?'' தடுமாறினான்.

''உட்கார்பா'' என்றார்.

கையால் தடவியபடி உட்கார்ந்தான்.

''தம்பி யார்ன்னு சொல்லவே இல்லையே?'' தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் கேட்டார்.

''தாமஸ்.''

''தாமஸ்?''

''மீராவோட ஹஸ்பெண்ட்.''

உச்சி முடியை யாரோ வெடுக்கெனப் பிடித்து இழுப்பது போல் இருந்தது.

''நீங்க பேசமாட்டீங்கன்னு எனக்குத் தெரியும். நீங்க என்னை அவமானப் படுத்தினாலும் சரி. எல்லாத்தையும் எதிர் பார்த்துத்தான் பீகார்ல இருந்து தட்டுத்தடுமாறி வந்திருக்கேன். எனக்காக தன்னையே வருத்திக்கிட்ட மீராவோட கடைசி ஆசையையாவது நிறைவேத்திக்கணும் ஸார், அதுக்குத்தான் ஓடி வந்திருக்கேன்.''

இதயத்துக்குள் பலமான சாட்டையடி விழுந்தது செல்வ விநாயகத்திற்கு.

''எம் பொண்ணு கண்ணு தெரியாத ஒருத்தனையா கல் யாணம் பண்ணிகிட்டா,'' மனம் கலங்கியது.

''மீரா எம்மேலே பரிதாபம்தான் பட்டா, காதல், கத்தரிக்கா எதுவும் இல்லை. நான் ஒரு நல்ல நண்பனாத்தான் அவளுக்கு இருந்தேன். உங்க குடும்பம் பற்றி எல்லா விஷயமும் எனக்குத் தெரியும். உங்களைப் பத்தி, பாரதிங்கற பொண்ணை பத்தி கவலைப்படாத நாளே கிடையாது ஸார். குடும்ப கௌரவம், சட்டம், நாயம்னு நீங்க பேசி, வீட்டை வித்து இவளுக்கு கல்யாணம் பண்ணி வைக்கணும்னு முடிவு பண்ணத தாங்க முடியாம எங்கிட்ட புலம்பினா, என்னைக் கல்யாணம்



பண்ணிக் குடுத்துட்டு, அவங்க எங்க இருப்பாங்க, எந்த ஆதரவும் இல்லையே, இரண்டு தங்கைங்க இருக்காங்க ளேன்னு அழுவாத நாளே இல்லை. பெத்தவங்களை நினைச்சி இந்த அளவு மனசு ஒடிஞ்ச மீராவ நினைக்கும்போதே பெருமையா இருந்தது ஸார். அவ மேலே காதலைவிட மதிப்புதான் அதிகமா இருந்துது. உங்களுக்கு கஷ்டத்தக் குடுக்கக் கூடாதுங்கற ஒரே காரணத்துக்காகத்தான் என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஒத்துகிட்டா. அவ என்னோட வந்ததுக்குக் காரணம் நீங்க, உங்க குடும்பம், பொறுப்பில்லாத உங்க மகன்கள். மொத்தமா சொல்லணும்னா பணம் தான் ஸார் காரணம். எங்க கல்யாணத்துக்கு முதல் நாள் கோயமுத்தூர் போய் அவ அண்ணிகிட்ட சொல்லிவிட்டுத்தான் வந்தா...''

''ரா...தா... வுக்குத் தெ...ரி...ஞ்...சா'' தடுமாறினார்.

''இம்.. அவங்க கல்யாணம் வேணாம். நான் அப்பா கிட்டேயும் அம்மாகிட்டேயும் சம்மதம் வாங்கித் தரேன்னு தான் சொன்னாங்களாம்.''

''ராதாவுக்கு எல்லாமே தெரியுமா?''

''தெரியும். அவங்களால தடுக்கவும் முடியல, நான் பாத்துக் கிறேன்னு கேரண்டி கொடுக்கவும் முடியல. பாவம் அவங்க என்ன செய்வாங்க. உங்க பாரத்தைக் குறைக்கத்தான் என் னோட பீகார் வந்தா, அங்கே வந்தும் சும்மா இருக்கல, ஒரு கம்பெனியில வேலைக்குச் சேர்ந்தா, 750 ரூபாய் சம்பளம். மாதம் மாதம் அண்ணிக்கு ரூ. 500 அனுப்புவா.. உங்களுக்கு அனுப்பச் சொல்லி, மீதி உள்ள பணத்தை உங்களை வாரிசா காட்டி எல்.ஐ.சி. கட்டினா. அவ அண்ணிகிட்ட இருந்த ஒரே ஒரு லெட்டர் வந்துச்சி, தானும் 500 ரூபாய் சேர்த்து.. மாசம் ஆயிரம் ரூபாய் அனுப்பிகிட்டு இருக்கேன். நீங்க கவலைப் படாமல் இருங்கன்னு. நான் குருடன்னு அவ அண்ணிக் குக்கூடத் தெரியாது. மீரா சொல்லலை.''

பட்டென நூல் அறுபடுவதுபோல், அவருக்குள் ஒவ்வொரு நரம்பும் அறுபட்டது. ரத்த நாளங்கள் வெடித்துச் சிதறிய



அதிர்ச்சி. கண்ணுக்குள் கங்கை புறப்பட ஆயத்தமானாள். என் பெண்ணா? நான் வளர்த்த அந்த மான்குட்டியா, தன் னையே அழித்துக் கொண்டு எனக்குப் பணம் அனுப்பியது. என் பெண்ணை எவ்வளவு கேவலமாக நினைத்து விட்டேன். எந்த அளவிற்கு அவள் மேல் ஆத்திரப்பட்டேன்! நான் எவ் வளவு முட்டாள்? இதை உடனே சாரதாவிடம் சொல்ல வேண் டும். நம் மீரா, நம் பெண், நமக்காகத்தான் வாழ்கின்றாள். வாய்விட்டு அழ குரல் எழுந்தது கட்டுப்படுத்திக் கொண்டு,

தாமஸின் கன்னங்களை கைகள் நடுங்க வருடிக் கொடுத்து,

''தம்பி.. என்னை மன்னிச்சிடுப்பா, புரியாம யோசிக்காம புத்திய விட்டுட்டேன். நான் மீராவ பாக்கணும்பா, எம் பொண் ணப் பாக்கணும் அவளைப் பார்க்கணும். எங்கே இருக்கா, பயந்துகிட்டு தெரு ஓரத்துலேயே இருக்காளா? சொல்லுப்பா.. எப்படி இருக்கா, நான் என்னோட பொண்ணப் பார்க்கணும்.''

''........''

''சொல்லுப்பா எம்பொண்ணு எப்படி இருக்கா?''

நான்கு மாதமாக அடக்கி அடக்கி தனக்குள்ளேயே கொதிக் கும் அதிர்வோடு எப்போதுடா வெளியே வருவாய் என்று காத்திருந்த துக்கம். அழுகை, படீரென வெடித்துச் சிதறியது. அந்தக் கம்பீரமான குருடான இளைஞன் கேவலோடு விம்மத் தொடங்கினான்.

''இத்தனை நாளா நான் குருடனா இருக்கேனேன்னு கவலைப் படலை ஸார், அதுக்குக் காரணம் மீரா. மீராவோட நட்பு கெடச்சபோது, குளிர்ச்சியான சோலையில புகுந்த மாதிரி சந்தோசப்பட்டேன். என்னை அவளே கல்யாணம் பண்ணிக் கிறேன்னு சொன்னபோது, இந்த உலகத்துக்கே நான்தான் அதிபதிங்கற மாதிரி தெம்பு, ஆனா, இப்ப... இந்த நிமிஷம் வரை மீராவ இழந்திட்டு நான் எப்படி... இருக்கேன்னே தெரி யல ஸார். இப்பதான் முழுக் குருடனா இருக்கேன், இப்பதான் குருடனாயிட்டேன்'' அவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு கதறினான்.



''என்னப்பா... சொல்ற?'' குரலில் பயமும் நடுக்கமும் கலந்து தடுமாறியது.

''செத்துட்டா ஸார். என்னோட மீரா நாலு மாசத்துக்கு முந்தியே செத்துட்டா ஸார்.''

''மீரா!'' நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கதறினார்.

''ஆக்ஸிடென்ட், லாரி மோதி.. கந்தலாயிட்டா, என்னைப் பார்க்க, எங்கிட்ட பேச அவ உயிர் ஒட்டிகிட்டு இருந்து, அவ கடைசியா இதத்தான் ஸார் சொன்னா... கண்ணுக்கு முன்னா லேயே சாவு தெரியுது. இன்னும் கொஞ்ச நேரத்துல இந்தக் காற்றோடு ஆவியா கலந்துடப் போறேன்.. எல்.ஐ.சி. பணத்தை அம்மாகிட்டே எப்படியாவது சேர்த்துடுங்க.. அண்ணிகிட்ட சொல்லிட்டா அவங்க பார்த்துப்பாங்க.. என்னங்க.. எனக்கு பயமா இருக்கு.. என்..னமோ நடக்குது. நான் உயிரோட இருந்துதான் எதையும் பண்ணல, செத்தாவது உதவணும். செய்வீங்களா?...''

அழுகையோடு சொல்லி முடித்தான் தாமஸ்.

துடிப்பே இல்லாமல், உணர்வற்றுப் போய் ஸ்தம்பித்து நின்றார் செல்வவிநாயகம்.



## 8

**வெ**றி ஏறிப்போய் உட்கார்ந்து இருந்தாள் ராதா. இதயம் தன் துடிப்பை அதிகப்படுத்தி மூச்சிரைப்பை ஏற்படுத்தியது. புசுபுசுவென கண்கள் வீங்கி கோபத்தில் கன்னங்களும் சிவப்பை பூசிக் கொண்டிருந்தன. கோபத்தை அடக்க வலுக் கட்டாயமாக எச்சிலை முழுங்கிக் கொண்டிருந்தாள். கண்களில்

அமுதசுரபி கணக்காக நீர் வழிய ஆரம்பித்தது. சோபாவின் ஓரமாக மடங்கிச் சுருண்டிருந்தாள். அவள் கண்ணீர் சோபாவில் உள்ள காட்டனை நனைக்க அதிகமாக பிரயாசைப் பட்டுக் கொண்டிருந்தது. தாமஸ் ராதாவைப் பார்த்துவிட்டுப் போய் இரண்டு மணி நேரங்களுக்கு மேலாகிறது. அவளின் ஒவ்வொரு செல்லிலும் மீராவின் பிரிவு பூதாகரமாக எழுந்தது.

'மீரா எங்களை எல்லாம் விட்டுட்டுப் போய்ட்டாளா? எப்படி மனம் வந்தது? எங்களுக்காக இல்லாவிட்டாலும், அவ மேலே உயிரையே வச்சி இருக்கும் அப்பாவி தாமசுக்காகவாவது உயிரோட இருந்திருக்கலாமே. அண்ணீ... அண்ணீ வாய் நிறைய கூப்பிட்டவ இப்போ உயிரோட இல்லையா? அதுவும் நாலு மாசத்துக்கு முன்னாலேயே போயிட்டாளா, பாவி... நான்தான், கையாலாகாதவளா இருந்திட்டேனே, அவசரப்பட்டுட்டியேடி, கல்யாணத்திலேயும் அவசரமா முடிவெடுத்துகிட்டு போயிட்ட, இப்போ விட்டுப் போறதிலேயும் அவசரப்பட்டுட்டியேடி.' ராதாவிற்கு நெஞ்சு வலிக்கத் தொடங்கியது. அப்படியே பிடித்துக் கொண்டு படுத்திருந்தாள்.

மாலை வீடு திரும்பிய அரவிந்தன் ராதாவின் கோலத்தைப் பார்த்துத் துணுக்குற்றான். 'என்னாச்சி இவளுக்கு? வீட்டுக் கதவு திறந்து கிடக்கு. ஹால் லைட் கூட போடாம, இப்படிப் படுத்து இருக்கா' கேள்வியோடு சுவிட்சைத் தட்டினான். பளீர் என ஹால் முழுவதும் வெளிச்சம் பரவியது. ராதாவிடம் எந்தச் சலனமும் இல்லை. அருகில் வந்து அவள் கழுத்தைத் தொட்டுப் பார்த்தான். அனலாகக் கொதித்தது. கழுத்து மடிப்புகளில் கண்ணீர் தங்கி பிசுபிசுத்தது.

''ராதா... ராதா'' உலுக்கினான். வெளிச்சத்தில் வீங்கிக் கிடந்த கண்கள் கூசின.

''என்னாச்சி, முகமெல்லாம் வீங்கியிருக்கு'' தூக்கி உட்கார வைத்தான்.



''அரவிந்தன் அம்மாவுக்கு கர்ப்பப்பை புற்றுநோய். ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணியிருக்காங்கன்னு, கடவுளுக்கே பொறுக்கலை, உங்களை சுமந்த கர்ப்பப்பைகூட அவங்க கிட்டே தங்க வேண்டாம்னு முடிவு பண்ணிட்டார்.''

அரவிந்தன் பேச வாயெடுத்தான்.

''அடங்கி அடங்கித்தான் இந்த அளவிற்கு ஆகிப் போச்சு, இம்.. ஒரு சந்தோசமான செய்தி, மீரா அதான் உங்க மூத்த தங்கச்சி.. உங்க பாஷையில பிழைக்கத் தெரியாத மடச்சி. நாலு மாசத்துக்கு முன்னாலேயே செத்துட்டாளாம். இப்போ தான் கண்ணு தெரியாத உங்க மாப்பிள்ளை சொல்லிட்டுப் போறார்.''

''மீ..ரா...'' அவனையும் மீறி அலறினான். தான் ஆடாவிட்டாலும் சதையாடும் என்பது வெட்டவெளிச்சமாகத் தெரிந்தது.

''எதுக்கு இப்ப பதற்றீங்க. அவளை நல்ல இடத்துல கல்யாணம் பண்ணிக் குடுக்கத் துப்பில்லை, அவ செத்தா என்ன வாழ்ந்தா என்ன? அண்ணீ... நாளைக்கு நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன், அப்பா அம்மாவுக்குக் கஷ்டத்தைக் குடுக்க விரும்பலை, அண்ணன்னு எனக்கு யாருமில்லைன்னு சொன்னப்போ, கூனிக் குறுகிப் போய்ட்டேன். அவளைத் தடுத்து நிப்பாட்ட என்னால முடியல.. காரணம் நீங்க, உங்க சுயநலம், உங்க பணவெறி.''

''வார்த்தையால கொல்லாத ராதா... காலம் முழுக்க அறுக்கும்'' கலங்கத் தொடங்கினான்.

''அறுக்கட்டும், நல்லா அறுக்கட்டும்.. அதுக்குத்தானே கத்தறேன்.. இன்னும் உருவாகாத உங்க குழந்தைக்கு.. எத்தனை பிளான் பண்ணுனீங்க.. இந்த மாதிரி எத்தனை கோட்டை அவங்க கட்டி இருப்பாங்க.. அண்ணன் - தங்கை உறவு எல்லாத்துக்கும் கிடைக்காது. மீரா போய்ட்டான்னதுமே



உங்க சதையெல்லாம் ஆடி அடங்குச்சே.. அதாங்க உறவு.. ரோட்ல போறவங்களுக்கு தான தர்மமா பண்ணச் சொன்னேன். உங்களைப் பெத்தவங்களைப் பார்த்துக்குங்க, தம்பி, தங்கையை அரவணைச்சிக்குங்கன்னுதானே கதறினேன்.

''இங்கே பாருங்க.. இத்தனை நாளா உங்ககூட சந்தோசமா வாழ்ந்தது போதும். நான் இப்போவே அத்தையப் பார்க்கப் போறேன். அவங்க ரெண்டு பேருக்கும் நீங்க உண்மையான பிள்ளைன்னா.. உங்க உடம்புல நல்ல ரத்தம் தான் ஓடுதுன்னா... இதயம்னு ஒண்ணு இருந்தா.. கிராமத்துக்கு வாங்க, வரும் போது கொஞ்சமாவது ஈரத்தை சுமந்துகிட்டு வாங்க.''

''நீ.. நீ..''

''இப்போ நான் போறேன், இது தற்காலிகப் பிரிவா அமையணுமா? நிரந்தரமான பிரிவா இருக்கணுமான்னு நீங்களே முடிவு பண்ணிக்குங்க.'' தன் உடைகள் இரண்டை அள்ளிப் போட்டுக் கொண்டு புறப்பட்டாள்.

ராதாவின் வாயில் இருந்து விழுந்த ஒவ்வொரு எழுத்தும், புட்பால் மைதானத்தில் கிடக்கும் பந்தாக எண்ணி, புரட்டியெடுத்தது அரவிந்தனை.

அதே நேரம்.

சிவா அவசர அவசரமாக பேண்டிற்குள் சட்டையைத் திணித்துக் கொண்டிருந்தான். உள்ளே நன்றாக செருகி, சுருக்கத்தை நீக்கி.. பெல்ட்டை இறுக்கினான். தலையை வேகவேகமாக வாரி.. சிலுப்பிவிட்டான்.

காபி எடுத்து வந்த ஜானகிக்கு ஆச்சர்யமாக இருந்தது.

வந்ததும் ரொம்ப டயர்டா இருக்குன்னு சொன்னவர், எங்கே கிளம்பிட்டார். உதட்டை மடித்துக் கடித்தாள்.

காபி டம்ளரை டேபிள் மேல் வைத்துவிட்டு, அவன் தோளில் கை போட்டாள்.



''என்னங்க.''

''இம்'' காலரை மடித்து விட்டான்.

''வெளியே கிளம்பிட்டீங்களா?''

''இம்.''

''எங்கே போறீங்க?''

திரும்ப அவளைப் பார்த்தான்.

''போக வேண்டிய இடத்துக்கு.''

''சினிமாவுக்கா?''

''புத்தி போவுது பாரு. சினிமாவுக்கு இல்ல, கோயிலுக்கு, என்னை வளர்த்து ஆளாக்கிய கோயிலுக்கு.''

''ஊருக்கா.''

''பரவாயில்லையே, கண்டு பிடிச்சிட்ட.''

''இப்ப எதுக்கு?''

''பாரதியோட லட்டரை நீ காட்டாட்டியும், சொல்லாட்டியும் கண்ணுல பட்டுச்சி.''

நிதானித்த ஜானகி.

''மறந்துட்டேன்.. அப்புறம் சொல்லலாம்னு.''

''.........''

''ஹாஸ்பிட்டல்லதானே அட்மிட் பண்ணியிருக்காங்க. இப்ப என்ன செத்தா..'' அதற்குமேல் அவளைப் பேச விடாமல் கழுத்தை இருக்கிப் பிடித்தான்.

''மேலே பேசின கொன்னுடுவேன். மனுசனா இருக்கேன், கொலைகாரனா மாத்திடாத'' கைகளை உதறிக் கொண்டான்.

ஜானகிக்கு பயம் சூழ ஆரம்பித்தது. சிவா இந்த அளவு கத்தியோ, கோபப்பட்டோ அவள் பார்த்ததில்லை.

''உனக்குத் தேவை பணம். அவ்வளவுதானே. இந்தா பாஸ்புக்.'' தூக்கி எறிந்தான். ''வச்சிக்கோ, என்னைவிடப் பணம் உள்ளவன் கிடைச்சாலும் கல்யாணம் பண்ணிக்கோ.''

''ஐய்யோ!'' காதைப் பொத்திக் கொண்டாள்.

''லுக்... நீ பெட்டி படுக்கையைத் தூக்கிகிட்டு உங்கம்மா வீட்டிற்குப் போனாலும் எனக்குக் கவலையில்லை. இதெல்

லாம் பேசப் பேச சாக்கடையில் கல்லெறிஞ்ச மாதிரிதான். புதுமருமகளா, பொண்ணா, ராதாண்ணி போல உன்னால மாற முடியும்னா.. என்னோட ஸ்கூட்டர் பில்லியன் உனக்காகக் காத்துகிட்டு இருக்கும். அதுவும் காலையில வரைக்கும் தான். இப்போ வெளியே போறேன். கிராமத்துக்கு இல்ல, அம்மா ஆபரேஷனுக்கு பணம் புரட்ட. காலையில ஆறு மணி வரைக்கும் இங்கேதான் இருப்பேன்'' வெளியே கிளம்பிப் போகும் சிவாவை வெடவெடவென நடுங்கும் உடலோடு பார்த்தாள் ஜானகி.

அதே சமயம் சுமதியின் வீட்டில்.

டி.வி.யில் ஏதோ சீரியல் ஓடி காச் மூச்சென சத்தம் கேட்டது. மற்றொரு பக்கம் டேப்பில் ஏதோ கேசட் சுழன்று... டப்பென விழுந்தது. சமையல் அறையில் சுமதி எதையோ உருட்டிக் கொண்டிருந்தாள். எதையும் லட்சியம் செய்யாமல், விரல்களில் சொடுக்கு எடுத்துக் கொண்டு, தீவிரமான சிந்தனையில் இருந்தான் சரவணன். சமையல் அறையில் இருந்து வெளியே வந்து பார்த்த சுமதி. டேப்பையும், டி.வி.யையும் அணைத்தாள். அருகில் வந்து அவன் தோளில் தலை சாய்த்தாள்.

''ஐய்யாவுக்கு என்ன மூணு நாளா தீவிரமான யோசனை?'' அவள் தோளைத் தட்டிக் கொடுத்தவன். கவர்ச்சியாகச் சிரித்தான்.

''என்ன யோசனை... இம்.''

''சரியான முடிவிற்கு வர முடியல சுமதி.''

''டக்குன்னு எடுக்க வேண்டியதுதானே... எதுக்குக் குழம்பணும்?''

''அப்படீங்கறியா?''

''இம்...'' அவன் கழுத்தில் முகம் புதைத்தாள்.

''நீயும் நானும் சரியான ஜோடி தானான்னு சந்தேகமே இருக்கு. அதான் யோசிக்கிறேன்.''

''கிண்டல் தானே வேணாம்.''



''சத்தியமா உண்மை. பணத்தை வச்சிகிட்டே.. இல்லைன்னு கூசாம உங்கப்பாக்கிட்ட நீ சொன்னது எந்த அளவு உண்மையோ, அந்த அளவுக்கு இதுவும் உண்மை.''

சடார் என எழுந்து சரவணனைப் பார்த்தாள் சுமதி.

''சுமதி உம்மேல கோபமோ, வருத்தமோ எனக்கில்லை. உயிருக்குப் போராடிகிட்டு இருக்கிற உன்னோட அம்மாவுக்கே உதவி பண்ண யோசிக்கிறியே... நீ எப்படி என்னோட அம்மா அப்பாவப் பார்த்துக்குவ?''

''எனக்கு நீ கண்ணுன்னா, என்னோட அம்மா, அப்பா, தங்கை நான் சுவாசிக்கும் ஆக்ஸிஜன். கண்ணு இல்லன்னா, குச்சியோட உதவியில் வாழ்ந்திடலாம். ஆக்ஸிஜன் இல்லைன்னா? நீயும் என்னோட ஆக்ஸிஜனா மாறணும்னா, உன்னை நிறைய மாத்திக்கணும். உன்னால முடியுமா? வயசான காலத்துல பேரன்ட்ஸ் நமக்கு குழந்தைங்க சுமதி. நாமதான் பார்த்துக்கணும். நீ அவங்களுக்கு மகளா இல்லாம இருக்கலாம். ஆனா நான் மருமகன். எனக்கும் உரிமை இருக்கு. கடமை இருக்கு. அவங்களோட மகளா நீ இருக்கறதைவிட என்னோட மனைவியா மாறணும். உன்னால நான் பெருமைதான் படணும். தலை குனியக் கூடாது. காலையில நான் ஊருக்குப் போறேன். நீ நல்ல மகளா வரணும்னு ஆசை. உன்னைக் கட்டாயப்படுத்தல. ஏன்னா அன்புங்கறது சொல்லி வர்றது இல்லை. நீ எடுக்கப் போற முடிவுலதான், நம்மோட வாழ்க்கை இருக்கு...''

எழுந்து தோட்டத்துப் பக்கம் வந்து நின்றான். ஒரு சிகரெட்டை உருவி உதட்டில் வைத்துக் கொண்டவன், இவள் செல்வவிநாயகத்தின் ரத்தம். சாரதாவின் மணிவயிற்றில் ஊறியவள். நிச்சயம் யோசிப்பாள். மாறுவாள் தவறைத் திருத்திக் கொள்வாள் என்ற நம்பிக்கையோடு புகையை உள்ளிழுத்து வெளியே விட்டான்.

உள்ளே சுமதி புழுவாகத் துடித்தாள்.

கணவன் அல்லாத.. காமுக ஆடவர்கள் நாலைந்து பேர் சுற்றி நின்று உடைகளை உருவி நிர்வாணப்படுத்தி.. ரசித்து சிரிப்பது போல் கூனிக் குறுகிப் போனாள்.





# 9

ஸ்பெஷல் வார்ட்.

சாரதாவிற்கு ட்ரிப்ஸ் ஏறிக் கொண்டிருந்தது. பேசும் அளவுக்கு கொஞ்சம் முன்னேற்றம். வெண்ணிற போர்வை கைகளை விட்டு கழுத்துவரை போர்த்தி விடப்பட்டிருந்தது. அவளின் இதயத் துடிப்பை கம்ப்யூட்டர் கருவி பதிவு பண்ணிக் கொண்டிருந்தது. சீராக மார்பு, ஏறியிறங்கிக் கொண்டிருந்தது. தலையில் இருக்கும் அந்தக் கொஞ்ச முடியும் அவிழ்ந்து, கழுத்துப்புறம் பரவி, சங்கடத்துடன் தலையை அசைத்து அறை முழுவதும் சுற்றிப் பார்த்தாள்.

'பாரதி எங்கே?' அந்த டாக்டர் தம்பியைக் கூடக் காணோம் யோசனையில் இருக்கும்போது, கதவைத் தள்ளிக் கொண்டு, நிரந்தரமான அந்த குளோசப் புன்னகையோடு நுழைந்தான்.

''என்னம்மா... எப்படி இருக்கீங்க?'' சாரதாவின் தலைப் பக்கமாக வந்தவன், நாக்கை நீட்டச் சொல்லி டார்ச்சடித்தான். பல்ஸ் பார்த்தான். கண்களின் இமைகளை விரித்துப் பார்த்தான்.

''குட்... நல்ல இம்ப்ரூவ்மெண்ட் தான்... சீக்கிரம் வீட்டுக்குப் போயிடலாம், இப்ப இருமல் கம்மியாயிருக்குல்ல?''

''ஆமாம்பா.''

வயிற்றில் கை வைத்தவன் ''இங்கே வலி இருக்கா?'' என்றான்.

''இல்லை.''



ஸ்டெத்தஸ் கோப்பை மார்பில் வைத்துப் பார்க்கும் போது மீண்டும் சிரித்தான்.

''நான் ஒண்ணு கேட்டா சொல்லுவீங்களா?''

''அம்மா! நான் உங்க பிள்ளை மாதிரி, எதுக்கு வாங்க போங்கன்னு, என்ன சொல்லணும்?''

''எனக்கென்ன?''

''உங்களுக்கா, இருமல், சுத்தமா உடம்புல தெம்பே இல்லை அதான்.''

''எங்கிட்ட பொய் சொல்லாதிங்க தம்பி.. எனக்கேதோ வியாதி.''

''யார் சொன்னா. இன்னும் நாலு நாள்ல எழுந்து எனக்கு ஹலோ! சொல்லப் போறீங்க.''

''சிரிச்சி பேசியே மயக்கறப்பா.''

''மயங்க வேண்டியவ மயங்கமாட்டேங்கறாளே'' சொல்லிவிட்டு நாக்கை கடித்துக் கொண்டான். வெகு நாட்களுக்குப் பிறகு சாரதா சிரித்தாள்.

''பெரிய படிப்பெல்லாம் படிச்ச டாக்டர் தம்பியான நீங்க, இப்படி அன்பா பேசுவீங்கன்னு நான் கனவுலகூட நினைக்கலை தம்பி.''

''உங்களுக்கு ஏதாவது வேணுமாம்மா... ஆங்... ஒண்ணுக்கு.. ரெண்டுக்கு எல்லாம் சரியா போகுதா?''

சங்கடமாகச் சிரித்த சாரதா, ''போகுதுப்பா'' என்றாள்.

''தம்பீ... நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே.''

''ம்கூம்.''

''பாரதிக்கு... உங்களை மாதிரி ஒரு ராஜகுமாரன் தான் புருஷனா வரணும்.'' உள்ளுக்குள் குளிர்ந்த மனோஜ் வெட்கமாகச் சிரித்தான்.

''எனக்கு இருக்கிற ஒரே ஒரு குறை பாரதியோட கல்யாணம் மட்டும்தான். எங்கே அவளைத் தவிக்கவிட்டுப்

போயிடுவேனோன்னு பயம்மா இருக்குப்பா.. பாரதிக்குன்னு ஒரு வழியைத் தேடும் வரை என்னோட உயிர் இந்த உடம்புல ஒட்டிக்கிட்டுதான் இருக்கும்.''

சாரதாவின் கைகள் மேல் தன் கைகளை வைத்துக் கொண்ட மனோஜ்,

''அம்மா! இப்ப ஒரு டாக்டரா பேசல, உங்க மேலே ஒரு ஈடுபாடு வந்ததுக்குக் காரணமே உங்க பாரதிதான். பாரதியைத் தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு முடிவு பண்ணிட்டேன். மனசுக்கு ரொம்பப் புடிச்சிப்போச்சி. எனக்கு ஒரு பாட்டி மட்டும்தான். அவங்ககிட்டேயும் பேசிட்டேன். வரப்போற பேத்தியப் பார்க்க ஆர்வமா இருக்காங்க. உங்க பொண் ணோட பார்வைகூட என் மேல விழல. நீங்கதான் பாரதி அப்பாகிட்ட சொல்லி ஏற்பாடு பண்ணணும். அன்புக்கு ஏங்கின வங்கதான், அன்பைக் குடுக்க முடியும். நீங்க என்னோட வந்திருங்க. பெரியவங்க யாரும் எனக்கில்ல. உங்க பொண்ணு பாரதி எனக்கு மனைவியாக் கிடைப்பாளா?''

''தம்பி... அவளைப் பத்தி.''

''எனக்கு எல்லாம் தெரியும்மா. உங்க வீட்டுக்காரர் கிட்டே பேசிப் பார்த்தேன். குடும்ப நிலவரம் பாரதியோட பிறப்பு எல்லாம் தெரியும். கெட்ட நேரத்துல பிறந்தவங்க எல்லாம் கெட்டவங்க இல்லை. நல்ல நேரத்துல பிறந்தவங்க எல்லாரும் நல்லவங்களும் இல்லை. இதில் எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. மனச நேசிக்கிறவன் நான்.''

பூரிப்பும், சந்தோச அதிர்ச்சியும் சாரதாவைச் சூழ்ந்து கொண்டது. ''எம்புள்ளைக்கு நல்ல வாழ்க்கை அமையும்னு எனக்கு நல்லாவே தெரியும். கடவுள் கை விட மாட்டார். நீ நல்லா இருக்கணும்பா. இது ஒண்ணு போதும் நிம்மதியா உயிர் போகும்.'' கலங்கிய சாரதாவைக் கலங்கிய கண்களோடு பார்த்துச் சிரித்தான் மனோஜ்.

''ராத்திரி பணியாப்பா.''



''ஆமாம்மா. இம் காலையில ஆறு மணி போயிட்டு மதியம் இரண்டு மணிக்குத்தான் ட்யூட்டி. ஆனா நான் பத்து மணிக்கே வந்துடுவேன்'' என்றான் சிரித்துக் கொண்டே.

சாரதாவிற்குப் புரிந்தது. பாரதி அதிர்ஷ்டசாலி என்று தோன்றியது.

''மணி என்னப்பா!''

இடது கையைத் திரும்பிப் பார்த்தவன் ''காலையில ஐந்து மணி'' என்றான். அவன் சொல்லி முடிக்கும் முன், ராதா கதவை மெதுவாகத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தாள். அவள் பின்னாலேயே லேசான சந்தோசத்தோடும் அழுகையோடும் பாரதி.

''பாரதி நீ தூங்கலை?''

''எப்படிம்மா தூங்கறது?'' சன்னமாகக் கூறினாள்.

''ரா....தா...'' சாரதா தடுமாறினாள்.

மாமியாரின் கால்களை அழுத்தமாகப் பற்றிக் கொண்டு, எதுவும் பேசாமல் அழுத்தமான பிடியில் தன் அன்பையும் பாசத்தையும் தெரியப்படுத்தினாள் ராதா.

''பக்கத்துல வா ராதா.''

எழுந்து அருகில் வந்தாள்.

''இந்த தம்பி.. நம்ம பாரதிய கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படுது. குடுத்துடலாமா?''

பாரதி சலனம் இல்லாமல் மனோஜை நிமிர்ந்து பார்த்தாள். அதில் அன்போ பாசமோ, காதலோ எதுவும் இல்லை. ஆச்சர் யம் தெரிந்தது. 'என் அம்மாவைக் காப்பாற்றச் சொன்னால், என்னைக் காலம்பூரா காப்பாற்றுகிறாயா?' என்ற கேள்விதான் இருந்தது.

ராதா மனோஜை நிமிர்ந்து பார்த்துச் சிரித்தாள். பதிலுக்கு சிரித்தான் மனோஜ். ''என்னம்மா நீங்க, எனக்குக் கல்யாணம் வேணும்னு கேட்டேனா, எதுக்கும்மா இப்படியெல்லாம் பேசுறீங்க.. முதல்ல நீங்க நல்லபடியா வீட்டுக்கு வாங்க...''



''பாரதி நீ சும்மா இரு'' அதட்டினாள் ராதா.

''டாக்டர் நீங்க.''

கைநீட்டி ராதாவின் வார்த்தைகளைத் தடுத்தவன்.

''நீங்க எங்கிட்ட என்ன கேக்கப் போறீங்கன்னு தெரியும். அழகுக்காகவோ கவர்ச்சிக்கோ நான் பாரதியை விரும்பல. அந்த அமைதி, அடக்கம் பாசத்துக்காக தன்னையே அழிச்சிக் கிற தியாகம். இதெல்லாந்தான். அழகுக்கு நான் ஆசைப்பட் டிருந்தால் ஒரு வருசத்திற்கு முன்னாலேயே எனக்கு மேரேஜ் ஆகி இருக்கும். ஐம் க்ரேஸி அபவுட் பாரதி. மனைவின்னு ஒருத்தி எனக்கு வந்தா அது பாரதியாதான் இருக்கும். பாரதி சராசரி பெண்ணா இருந்தா நிச்சயமா என்னோட பர்சனாலிட்டி, பணம், அந்தஸ்த்து அவளைப் பாதிச்சி இருக்கும். ஆனா சராசரி பெண்ணில்லை. பாரதி மனசுல எனக்கு இடம் கிடைச்சா, நான்தான் அதிர்ஷ்டக்காரன். உண்மையான அன்புக்கும் என் னைக்கும் தோல்வியில்லை. அதனால நிச்சயமா ஒருநாள் அவள் என்னை விரும்புவா. இவ மனசுல இருக்கிற காயங் களுக்கு என்னோட பாசத்துல மருந்துபோட முடியும். வெயிட் பண்றேன் ஸீ யூ'' அருவி மாதிரி கொட்டிவிட்டு அடுத்த பேஷண்ட்டைப் பார்க்க வெளியேறினான் மனோஜ்.

ராதாவிற்கு ஒருபுறம் சந்தோசமாகவும் மற்றொருபுறம் துக்கமாகவும் இருந்தது. இந்த நல்ல செய்தி சாரதா நன்றாக இருக்கும்போது வரக்கூடாதா? பாரதியை இழுத்து அணைத்து உச்சி முகர்ந்தாள். அப்படியே ஆதரவாக தன் மேல் சரித்துக் கொண்டாள்.

''அத்தை, இதோ வந்துடுறேன்.''

எழுந்தாள்.

''ராதா போகாதம்மா.. பக்கத்துலேயே இரும்மா.''

''வந்துட்றேன்.''

கதவை முழுவதும் சாத்த மறந்து, பொறுக்க முடியாமல் பக்கத்துச் சுவரிலேயே தலையை முட்டிக் கொண்டு அழத்



தொடங்கும்போது... அவள் தோளை யாரோ தொடுவது உணர்ந்து, டாக்டரோ நர்ஸோ என கண்களைத் துடைத்துக் கொண்டு திரும்பியவளுக்கு அதிர்ச்சி. செல்வவிநாயகம் துணிப் பைகளோடு நின்றிருந்தார். கண்ணீர்.

ஜீவன்போய் பரிதாபமாக நின்றிருந்தார்.

''மா... மா.''

''........''

''என்னை மன்னிச்சிடுங்க.''

''.........''

''மீரா கல்யாணம் பண்ணிக்கறதுக்கு முந்தியே எங்கிட்ட வந்தா, அவளைத் தடுக்கவும் முடியல. வாழ்த்தவும் முடியல. நேத்து சாயந்திரம் தாமஸ் வீட்டுக்கு வந்தார்.''

செல்வவிநாயகம் எதுவும் பேசாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். பாரதிக்கு ஒண்ணும் புரியவில்லை.

''அவ தப்பு பண்ணல மாமா, நமக்கு கஷ்டத்தை குடுக்கக் கூடாதுன்னுதான் போய்ட்டா, கண்ணு தெரியாத, ஆதரவில் லாத தாமஸைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா.''

எந்தத் தவறு நடக்கக் கூடாதுன்னு ராதா வெளியே ஓடி வந்தாளோ, அந்தத் தவறு கதவு சந்து வழியாக காற்றின் உதவியோடு, நடந்து உள்ளே போய்க் கொண்டிருந்தது.

''மாமா மீரா இறந்து நாலு மாதம் ஆகிவிட்டதுன்னு நேத்து சாயந்தரம் தான் தெரியும். என்னை மன்னிச்சிடுங்க'' காலில் விழுந்தவளைத் தொட்டுத் தூக்கும்போது... பாரதி செல்வவிநாயகத்தின் சட்டையை இறுக்கிப் பிடித்தாள்.

''அப்பா! உண்மையைச் சொல்லுங்கப்பா, மீராக்கா எங்கே... செத்துப் போயிட்டாளா... எல்லோரும் சேர்ந்து பொய் சொல்றீங்க... மீராக்கா எங்கே?..'' வீறிட்டுக் கத்திய வளின் வாயைப் பொத்தி... நெஞ்சோடு அழுத்திக் கொண் டார் செல்விநாயகம். அவளைக் கதறவோ, திமிறவோ விடவில்லை. பாரதியிடம் இருந்து பொங்கிய கண்ணீர் செல்வவிநாயகத்தின் மார்பை நனைத்தது.

''உண்மையை மறைச்சதுக்கு என்னை மன்னிச்சிடுங்க மாமா.''

''.........''

''பேசுங்க.. திட்டணும்னு தோணினா திட்டிடுங்க'' தழுதழுத்தாள்.

''உன்னைத் திட்டுனா, என்னோட நாக்கு அழுகிடும்மா, நாங்க இருக்க வேண்டிய இடத்துல நீ இருந்து இருக்க. உன்னைக் கையெடுத்து கும்புடணும்மா.. மீரா உன் மூலமா எங்களுக்கு ஐந்நூறு அனுப்பினாளா தாயி? அவள் அனுப்புறாளேன்னு நீயும் ஒரு மகளா மாறி ஆயிரம் அனுப்புனியாம்மா... மீரா... இந்தப் பிஞ்சு, (பாரதியை மேலும் இறுக்கிக் கொண்டார்) நீ.. இந்த உறவு எனக்குப் போதும்மா.. இங்க பார்.. இந்த பைக்குள்ளே என்ன இருக்கு தெரியுமா? ஐம்தாயிரம் இருக்கு'' பையில் கைவிட்டு பணக்கட்டுக்களை நடுக்கத்தோடு எடுத்தார்.

''இது.. இது பணமில்லே ராதா.. எம்பொண்ணு, ஆமாம். என் பெரிய பொண்ணு, பாரதி! மீரா எங்கன்னு கேட்டியே, இதான், இதான்.. இந்தப் பணம்தான். அவ சேர்த்த பணத்துக்கு நானும் உங்கம்மாவும் வாரிசும்மா. இங்கே பாரு இந்தப் பணத்துல மீரா முகம் தெரியுது. சிரிக்கிறா பார்.. என்னைப் பார்த்து கேலியா சிரிக்கிறா பாரு.. என்னைப் பத்தி தப்புக் கணக்குப் போட்டுட்டீங்களேப்பான்னு அழறா, லாரியில் அடிபட்டு செத்துட்டாளாம். எப்படித் துடிச்சிருப்பா...'' அந்தப் பணக்கட்டுகளை மீராவாக எண்ணி நெஞ்சோடு வைத்துக் கொள்ளும்போது,

சுவாசம் தடைபட்டது போல் மூச்சுத் தடுமாறியது.

அதே நேரம்... உள்ளே போன வார்த்தைகள், சாரதாவின் உடலில் இருந்த உயிரை ஒரேயடியாக பிடுங்கி எடுத்தது. கம்ப்யூட்டர் ஸ்கிரீன் நேராகக் கோடு விழுந்தது.

'ஹக்' நெஞ்சை பிடித்துக் கொண்டு செல்வவிநாயகம் தள்ளாட பதறினாள் ராதா.



''பாரதீ.. டாக்டரைக் கூட்டிக்கிட்டு வா... ஓடு'' கத்தினாள். அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு, மெதுவாக நடத்தி அருகில் கிடந்த சேரில் உட்கார வைக்கும்போது, மனோஜோடு ஓடி வந்து கொண்டிருந்தாள் பாரதி.

''ஸ்ட்ரெச்சரை கொண்டாங்க'' மனோஜ் சத்தமிடுவது அவருக்குள் சன்னமாக ஒலித்தது.

''தம்பீ... நா...ன்... சொல்றதைக் கேளுங்க... இந்த பணத்துல என்னோட பொண்டாட்டியக் காப்பாத்துங்க. அவளாவது அவள் பிள்ளைகளோட சந்தோசமா கொஞ்ச காலம் இருக்கட்டும். நான் செத்துட்டாக்கூட இப்போ அவளுக்குச் சொல்ல வேண்டாம். மீரா செத்ததும் தெரிய வேணாம். தம்பி...'' திணறினார்.

''ஸார்.''

''என்னோட கடைசி ஆசையையாவது நிறைவேத்தணும் தம்பி.''

''சொல்லுங்க ஸார்.''

பாரதியையும் ராதாவையும் கண்களைத் திறந்து மனம் முழுக்க நிரப்பிக் கொண்டு, ராதாவை இடது கையிலும், பாரதியை வலது கையிலும் பற்றிக் கொண்டு,

''எனக்கு பாரதிதான் கொள்ளி போடணும். ராதா சுமந்துகிட்டு வரும் தண்ணியிலதான் என் உடம்பு நனையணும். எனக்கு மட்டும் இல்லை, சாரதா போயிட்டாலும் ராதா கொள்ளி போடணும்... பாரதிதான் தண்ணி சுமக்கணும்... இவங்கதான் செய்யணும்.''

''அப்பா!... அப்பா...! அப்படியெல்லாம் பேசாதீங்கப்பா. என்னால தாங்க முடியாது. நீங்க என்னை விட்டுட்டுப் போனா, நான் எங்கப்பா போவேன்'' அழுகை பெரிதானது.

''பா.. ர.. தி இந்தத் தம்பி விரும்புறது எனக்குத் தெரியும்மா... உன்னைத் தவிக்க நான் விடமாட்டேன்டா... ராதான்னு...



உனக்கு இன்னொரு தாய் இருக்கா... அவ... உ...ன்...''

நின்று போனது, எல்லாம் நின்றுபோனது. சுவாசம் நின்று போனது. அன்பு நின்று போனது. உறவு நின்று போனது, அத்தனையும் நின்று போனது. செல்வவிநாயகத்தின் கைகள் பாரதியையும், ராதாவையும் இறுக்கிப் பிடித்து இருந்தது. கஷ்டப்பட்டு பிரித்தான் மனோஜ்.

''ஸார்!''

நிமிர்ந்து பார்த்தான். ஓர் இளம் நர்ஸ் நின்றிருந்தாள்.

''ஒன்பதாம் நம்பர் ரூம் சாரதாம்மா.. இறந்துட்டாங்க ஸார், இறந்து ஐந்து நிமிடம் இருக்கும்.''

அதிர்ச்சியோடு என்ன சொல்வது என்று தெரியாமல் ராதாவையும் பாரதியையும் பார்க்க, இருவருமே இறுகிப் போய்ப் பார்த்தார்கள்.

''ஸார், மாமாவையும் அத்தையையும் வீட்டுக்கு தூக்கிட்டுப் போக ஏற்பாடு பண்ணுங்க'' ராதா கூறினாள்.



## 10

**சா**ரதாவும் செல்வவிநாயகமும் நாற்காலியில் உட்கார வைக்கப்பட்டு இருந்தார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் இரண்டு குத்து விளக்கு ஏற்றப்பட்டு தேங்காயும் உடைக்கப்பட்டு விட்டது. வீடு கொள்ளாமல் கிராமத்து மக்கள். வீட்டிற்கு வெளியே பெஞ்ச் போடப்பட்டு, பந்தல் போட்டு, வாழை மரத்தை நிற்த்தி கட்டியாகி விட்டது. சாரதாவின் மூக்கில் வழிந்த துர் நீரை... இறந்து கிடக்கும் அத்தைக்கு வலிக்குமோ என்று ஒற்றி ஒற்றி எடுத்துக் கொண்டிருந்தாள்



ராதா. பாரதி செல்விநாயகத்தின் காலில் தலை வைத்துப் படுத்து இருந்தாள். வெளியே நின்று கொண்டிருந்த மனோஜ்.. ஊர் பெரியவர்கள் சிலரிடம் என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்று காரியத்தைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

காலை ஆறரை மணிக்கெல்லாம் ஹாஸ்பிடலுக்குச் சென்ற சரவணனுக்கும் சுமதிக்கும், விசயம் அங்கு உள்ளவர்களால் தெரிவிக்கப்பட்டது. கண்மண் தெரியாமல் பைக்கை ஓட்டிக் கொண்டு வந்த சரவணன், அடுத்த அரை மணி நேரத்தில் வீட்டு வாசலில் நிறுத்தினான். சுமதியை இழுத்துக் கொண்டு வேகமாக உள்ளே நுழைபவனுக்கு, ஒதுங்கி வழி விட்டார்கள். பிணக்கோலத்தில் பெற்றவர்களைப் பார்த்த சுமதிக்கு, பழைய நினைவுகள் தலைதூக்க... உயிர் கசிய ஆரம்பித்தது. கால்கள் தரையில் நில்லாமல் துவண்டு விழப் போனவளைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு... சரவணன் கதறினான்.

சரவணனிடம் தன்னை விடுவித்துக் கொண்ட சுமதி.. சுவற்றில் மோதிக் கொண்டு அலறினாள். நெற்றி வீங்கி காயம்பட்டு, இரத்தம் வடியத் துவங்கியது. ஓடி வந்து ராதாவையும் பாரதியையும் கட்டிக் கொண்டு, அவர்களின் கைகளால் தன் தலையை ஆக்ரோஷமாக அடிக்கத் துவங்கினாள்.

''அப்பா! என்னை மன்னிச்சிடுங்கப்பா, மன்னிச்சிடுங்கப்பா.. அம்மா நீயாவது மன்னிச்சிடுமா.. இனிமே என்னைப் பார்க்கக் கூடாதுன்னுதான் போய்ட்டீங்களா? சொல்லுங்கப்பா, உங்க பொண்ணு வந்திருக்கேம்பா, என்னைப் பாருங்கப்பா, அம்மா நீயும் பாரும்மா...'' கூடியிருந்த அத்தனை பேரும் வாய்விட்டு அழுதார்கள்.

சிவாவும் ஜானகியும் வந்தபோது எட்டு மணி.

ஜானகி இந்த முடிவை எதிர்பார்க்கவில்லை என்று அவள் முகமே காட்டியது. பேய் அறைந்தாற்போல் பீதியோடு காணப்பட்டாள். இந்த சாவுக்குத் தான்தான் காரணமோ என்ற குற்ற உணர்வில், எனக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? மருகிக் கொண்டு மாமனார், மாமியார் கால்களில் முகம் புதைத்து கண்ணீரால் தன் பாவத்தைக் கழுவிக் கொண்டிருந்தாள்.

சிவா நின்ற இடத்திலேயே மண்டியிட்டு அமர்ந்தான். கத்தி அழவில்லை. ஆனால் கண்ணீர் பெருகியது. நான் பாவி! நான் பாவி! என மனம் ஜெபமாக உச்சரிக்கத் தொடங்கியது.

அரவிந்தன் ஹாஸ்பிடலில் செய்தி கேட்டதும், டாக்ஸி பிடிக்கவோ, பஸ் பிடிக்கவோ தோன்றாமல், ஹாஸ்பிடலில் இருந்து உடல் தடுமாற கிராமம் நோக்கி ஓடி வந்தான். உள்ளே புயலாக நுழைந்தான். தலை கலைந்து கண்கள் சிவக்க நீர் தாரை தாரையாக வழிந்தது.

''அப்பா! அப்பா! என்னை மன்னிச்சிடுங்கப்பா, ப்ளீஸ்பா. என்னை மன்னிச்சிடுங்கப்பா.. நான் உங்க பிள்ளைப்பா.. தப்பு பண்ணிட்டாலும் திருந்திடுவேம்பா.. என்னோட மூஞ்சியிலேயே முழிக்கக் கூடாதுன்னு போயிட்டீங்களாப்பா..? அப்பா என்னைப் பாருங்கப்பா, அம்மா, அம்மா, நீ சொல்லும்மா, அப்பாகிட்டே என்னை மன்னிக்கச் சொல்லும்மா. நீதானேம்மா எப்பவும் எனக்கு சப்போர்ட்டா இருப்பே, நீயே என்னை வெறுத்திட்டா எப்படீம்மா.. ஏம்மா மௌனமா இருக்க?''

''அவருக்கு கொள்ளிய பாரதியும், தண்ணியை ராதாவும், அந்த அம்மாவுக்கு ராதா கொள்ளி போடணும்னு சொல்லிட்டாராமே'' கூட்டத்தில் ஒருவர் சலசலக்க..

துடித்து நிமிர்ந்து பார்த்தார்கள் சிவாவும் அரவிந்தனும்.



''பெத்த புள்ளைக்கு கொள்ளி போட்றதுதான் பெரிய பாக்யம்னு சொல்லுவாங்க.. அப்பா! எங்களுக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? வேண்டாம்பா'' சிவா கதறினான்.

''அண்ணா!'' பாரதி அழைத்ததும், இரண்டு பேரும் ஒரு சேர திரும்பிப் பார்த்தார்கள்.

''நீங்க ரெண்டு பேருமே போடுங்கண்ணா'' சலனமில்லாமல் கூறினாள். பாரதியின் அருகில் வந்த அரவிந்தன், அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு ''நீதாம்மா... கொள்ளி போடணும், உனக்கும், ராதாவுக்கும்தான் அந்த உரிமை உண்டு.. உங்க ரெண்டு பேருக்கும்தான் அந்த உரிமை இருக்கு...'' பாரதியை அணைத்துக் கொண்டு கதறினான்.

ராதா யார் அழுகையையும் தடுக்கவோ, உடன் அழவோ போகவில்லை. எல்லாரும் நன்றாக அழட்டும். எவ்வளவு பெரிய செல்வங்களை இழந்து இருக்கின்றோம் என்று உணரும் வரை அழட்டும்.. ஒதுங்கியே மௌனமாக வெறித்துப் பார்த்தாள்.

பாரதியும் ராதாவும் தண்ணீர் எடுக்கப் புறப்பட்டார்கள். ராதாதான் தண்ணீர் ஊற்றி புடவை, வேஷ்டி மாற்றி எல்லாவற்றையும் செய்தாள்.

செல்வவிநாயகத்தின் ஆசைப்படி..

மகளும், மருமகளும் ஆளுக்கொரு கொள்ளியைக் கையில் ஏந்தினார்கள்.

''பொம்பளப் புள்ளைங்க எதுக்கய்யா மயானத்துக்கு'' கூட்டத்தில் ஒருவர் கத்த...

''ஏன் போகக் கூடாது.. ஏன் போகக்கூடாது.. அவங்க ரெண்டு பேரும் மயானம் வரைக்கும் போகணும்.. அவங்க ரெண்டு பேரும் தான் வழியனுப்பணும்'' கண்களில் பொங்கும் கண்ணீரை லட்சியம் செய்யாமல் தீவிரமாகக் கூறும் அரவிந்தனை... அந்த சோகத்திலும் வித்தியாசமாகப் பார்த்



தாள் ராதா... தான் விரும்பிய கணவன், பிறந்து இருக்கின்றான் என்று தோன்றியது.

பாரதியைப் பற்றிய மனோஜின் எண்ணங்கள் வட்டமடித்தன.

ராதாவும், பாரதியும் தீப்பந்தம் ஏந்தி... முன்னால் நடக்க, பின்னால் ஊர்வலங்கள் புறப்பட்டன.

பாரதியைப் பார்த்தபடியே நடந்தான் மனோஜ்.

பாரதியை சிரிக்க வைக்க, பழைய பாரதியாகப் பார்க்க, மிகவும் கஷ்டப்பட வேண்டும். இவள் எனக்குக் கிடைக்கும் மிகப் பெரிய பொக்கிஷம். பத்திரமாக பாதுகாக்க வேண்டும். என் அன்பும் ஆதரவும் எவ்வளவு கிடைத்தாலும், மெதுவாகத்தான் இவள் மாறுவாள். காலம் எந்த வடுவையும் மாற்றக் கூடிய வல்லமை கொண்டது. அதுதான் மாற்ற வேண்டும்... மாற்றும்.

இது எதுவுமே தெரியாத தாமஸ் பீகாரில் உள்ள ஒரு ஆசிரமத்தில், கண்ணிழந்த குழந்தைகளுக்கு தன்னை ஆசிரியனாக அர்ப்பணித்துக் கொண்டான்.